எங்களின் அறிவில்
எங்களின் திறனில்
தங்கி நிற்போம் நாங்கள்
எங்களின் நிலத்தில்
எங்களின் விதைப்பில்
விளைவித்தே வாழ்வோம்
கட்டுப்படுத்தும் வாழ்க்கை
முறைகளை
நீக்கி எழுந்திடுவோம்
சூழலிலிணைந்து வாழும் வழிகளை
மீளவும் ஆக்கிடுவோம்.

-சி. ஜெயசங்கர்-


மூன்றாவது கண்

# செய்தி

மடல் 10 மார்ச் 08, 2022

உலகங்கள் தழுவிய உள்ளூர்களின் செய்திகளுக்கான மடல்


பெப்ரவரி 14, நூறு கோடி மக்களின் எழுச்சி நாள் - சிறப்பிதழ்

## நூறுகோடி மக்களின் எழுச்சி

**நூ**றுகோடி மக்களின் எழுச்சி என்ற உலகளாவிய பிரச்சாரமானது ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 14 ஆந் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ் எழுச்சியானது வன்முறைகள் இல்லாத வாழ்தலை வலியுறுத்தி, பெண்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் என்ற தொனிப்பொருளுடன் கொண்டாடப்படுகின்றது.

இவ்வுலகில் மூன்றில் ஒரு பெண் தனது வாழ்க்கைக் காலத்தில் குறைந்தபட்சம் ஒரு தடவையாவது வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றாள். 2012 ஆம் ஆண்டின் உலக சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 700 கோடியாக இருந்துள்ளது. அந்தவகையில் கிட்டத்தட்ட பாதித்தொகையினராகிய மூந்நூறு கோடிப் பெண்களில் நூறுகோடிப் பெண்கள் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். இதனை ஆய்வு செய்த அமெரிக்காவைச் சேர்ந்த பெண்ணிலைவாதியான Eve Ensiler என்பவரால் 2012 இல் பெண்களுக்கெதிரான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் என்ற தொனிப்பொருளில் 100 கோடி மக்களின் எழுச்சி முன்மொழியப்பட்டு, 2013 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை ஒரு உலகந்தழுவிய பிரச்சாரமாக இது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிராக எழுச்சி கொள்வோம், ஆடுவோம், பாடுவோம், கலைகளினூடாக மகிழ்வான வாழ்தலை உருவாக்குவோம் என்கின்ற அடிப்படையில் வருடா வருடம் இப்பிரச்சாரக் கொண்டாட்டமானது நடைபெற்று வருகிறது. இலங்கையிலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து இவ் எழுச்சி தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இச்செய்தி மடலில் நூறு கோடி மக்களின் எழுச்சி தொடர்பாக எடுத்துக் கூறப்படுகின்றது.




-சு. நிர்மலவாசன்-


மடல் உருவாக்க - பரிமாற்ற குழாம்
சி. ஜெயசங்கர்
நிறோஷினிதேவி. ம
சு. நிர்மலவாசன்
சிந்துஉஷா. வி
றொஷானி. ச



அஞ்சல்
23/1, நெசவு நிலைய வீதி,
மஞ்சந்தொடுவாய்,
மட்டக்களப்பு.


அன்பளிப்பு - 50/-

# நூறுகோடி மக்களின் எழுச்சி 2022

**நூ**றுகோடி மக்களின் எழுச்சி - 2022 ஆனது பெண்களுக்கு அவர்கள் உடல்கள் மீதுள்ள உரிமையைக் கொண்டாடுவோம்!, பெண்களின் உடல்கள் மீது மற்றவர் உரிமை கொள்ளாத சமூகங்களைக் கொண்டாடுவோம்! எனும் தொனிப்பொருளில் கொண்டாடப்படுகின்றது.

இன்றைய உலக முதலாளிய சந்தைப் பொருளாதாரம் பெண் உடலை கவர்ச்சிக்குரியதாகவும் நுகர்வுப் பொருளாகவும் சித்தரிக்கின்றது. பெண் உடலினை மையப்படுத்திய விற்பனைப் பொருட்களும், பெண் உடலை கவர்ச்சிக்குரியதாக நுகர்வுப் பொருளாய் சித்தரிக்கும் விளம்பரங்களும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும், தொடர்களும் ஒரு பொதுவான பெண் உடலை அனைத்துப் பெண்களுக்குமான உடலாக வடிவமைத்து வருகின்றது.

மாறாக ஒவ்வொரு உடலும் வித்தியாசமானது. தான் வாழும் சமூகச் சூழல், இயற்கைச் சூழலுக்கு ஏற்ப வேறுபாடு கொண்டது. அந்தவகையில் உண்மையான, இயற்கையான நிறமும், தோற்றமும், உடல் நலமும், பலமும், மனதின் உறுதியுமே பெண்களின் அழகு என்பதை வர்த்தக ஊடக ஏகாதிபத்தியங்களுக்கு உரத்துக்கூறுவோம்.

தமது உடல் தமது விருப்பத்திற்கு அப்பாற்பட்டு இன்னொருவரின் விருப்பத்தில் அழகு, பண்பாடு என்பன தொடர்பில் தீர்மானிக்கப்படலானது மனிதகுலத்தின் மீதான, குறிப்பாக பெண்கள் மற்றும் பால்நிலை பல்வகைமையினர் ஆகியோரது உடல்களில், அவர்களது உரிமைகளின் மீதான ஆதிக்கமே ஆகும்.

**அவரவர் உடல் அவரவர் உரிமை. அவ்வாறே அவர்களது தெரிவுகளும் அவர்களது உரிமை.**

**த**ங்களது பால்நிலையைத் தெரிவு செய்தல், தங்களது பாலியியல்பைத் தெரிவு செய்தல் என்பன மனிதர்களது உரிமை. மனிதர்களது அனைத்துத் தெரிவுகளும் அவர்களுக்கானதாக, அவர்களது சுய விருப்பானதாக இருக்க வேண்டும்.

உடலமைப்புகளின் பல்வகைமைகளை ஏற்றுக்கொள்ளல், புரிந்து கொள்ளல், நேசித்தல், நம்பிக்கை கொள்ளல், மதித்தல் என்பன எமதும், மற்றவரதும் உடல்களின் மீதான பால்நிலை மற்றும் பெரும் முதலாளித்துவ வியாபார ஆதிக்கத்தை, அதிகாரத்தைத் தகர்த்தலுக்கும், மனித குலத்தின் குறிப்பாகப் பெண்களதும், சிறுவர்களதும், பால்நிலைப் பல்வகைமையினரதும் உடல்கள் மீதான வன்முறைகளைக் களைதலுக்குமான அடிப்படையாக அமையும்.

இந்நோக்கில், மட்டக்களப்பில் மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு, வன்முறையற்ற வாழ்விற்கான காண்பியக் கலைஞர்கள், நீதிக்கான பறை - சமதை பெண்ணிலைவாத நண்பிகள் அணைவரும் இணைந்து நூறுகோடி மக்களின் எழுச்சி கொண்டாட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

**மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு வழங்கும் மீளுருவாக்கம் செய்யப்பட்ட கூத்துக்களில் பெண் பாத்திரப் படைப்புக்களின் அளிக்கை.**



**கூ**த்து மீளுருவாக்கத்தின் மிக முக்கியமான கோட்பாடுகளுள் ஒன்றாக ஈழத்துப் பாரம்பரிய அரங்க வெளியில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாத்திரக் கட்டமைப்புச் சார்ந்த மீளுருவாக்கமும் அமைந்துள்ளது.

பெண் பாத்திரப் படைப்புக்களை ஆணாதிக்க மயப்பட்ட புராண இதிகாச அடிப்படையிலும், பால்நிலை ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டுள்ள சமூகக் கட்டமைப்புக்களின் அடிப்படையிலும் இரண்டாம் பட்சமாகவும், எதிர்த்துக் கேள்விகளைக் கேட்காமல் ஆண்களின் ஏவல்களையும், குற்றங்களையும் ஏற்று பணிந்து செல்லும் வகையிலும், உடலியல் ரீதியான நளினங்களை ஆட்டக்கோலங்களில் காட்டுவதாகவும் வழமையான பாரம்பரியக் கூத்துக்கள் வடிவமைத்துள்ளன.

இந்நிலையில் பெண் தான் சார்ந்து நிலவுகின்ற அல்லது கேள்விகளாக இருக்கின்ற விடயங்களை கேட்கவும், பேசவுமான தளம் என்பது பெரும்பாலும் நிராகரிக்கப்பட்ட ஒன்றாகவே இருந்து வந்திருக்கின்றது.

கேள்விகளைக் கேட்கின்ற, தான் சார்ந்து இருக்கின்ற விருப்பு வெறுப்புகளைத் தயக்கமின்றி எடுத்துரைக்கும் பெண்களை எதிர்மறைப் பாத்திரங்களாக வடிவமைத்து விடுவதில் சனரஞ்சக ஊடகங்கள், தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் உட்பட பாரம்பரிய அரங்குகளும் விருப்பினைக் கொண்டிருக்கின்றன.

இந்தவகையிலான சமூக, புராண, இதிகாசக் கட்டமைப்புச் சார் பாத்திர வடிவமைப்புக்களைக் கடந்து “கூத்து மீளுருவாக்கத்தில்” பெண் பாத்திரங்கள் வலிமை மிகுந்ததாகவும், தான் சார்ந்து நிலவுகின்ற கேள்விகளை, தன் உரிமைகளை வெளிப்படையாகக் கேட்கவும், பேசவும் கூடிய பாத்திரங்களாகவும் மீளுருவாக்கம் செய்யப்பட்டிருப்பது கூத்து மீளுருவாக்கச் செயல்வாதத்தின் மிகமுக்கிய அம்சமாகும்.

பெண்களினதும் பூமியினதும் உடல்கள் மீது சமூகங்கள், மதங்கள், அரசியல் ஆதிக்கங்கள் மற்றும் சந்தைப் பொருளாதாரம் போன்றவற்றால் நிகழ்த்தப்படும் யுத்தங்களுக்கும் வன்முறைகளுக்கும் எதிராக எழுவோம் என்ற நூறு கோடி மக்களின் எழுச்சி - 2022 இன் தொனிப்பொருளுக்கமைய கூத்து மீளுருவாக்கத்தின் பெண் பாத்திர படைப்பானது முக்கியத்துவமுடைய தாகின்றது.

இந்தவகையில் பங்குபற்றல் முறையில் மீளுருவாக்கப்பட்ட பெண் பாத்திரங்களை மையப்படுத்திய நிகழ்த்துகையை இவ்வருட நூறுகோடி மக்களின் எழுச்சி தினமான 2022.02.14 அன்று முன்னெடுப்பதில் பெருமை கொள்கிறோம்.

**செயல்வாதப் பாடல்கள்**




**க**லைகள் மனித உணர்வின் வெளிப்படுத்தல்களாகவும், மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் சாதனமாகவும் பயன்படுத்தப்படுகின்றன. எங்கள் சூழலில் பரவலாக்கப்படும் பாடல்கள் பெரும்பாலும் எங்கோ உற்பத்தி செய்யப்பட்டு பரப்புரை செய்யப்படுபவையாக உள்ளன. அந்தவகையில் வார்த்தைகளின் அர்த்தம் புரியாமலும், அவற்றைக் கவனிக்காமலும் வயது வேறுபாடின்றி நாம் பல சினிமாப் பாடல்களை அன்றாடம் முணுமுணுக்கின்றோம்.

இச் சூழலிலே எங்களுக்கான பாடல்களை எங்களுக்கான இசையை நாங்களே உருவாக்குவதன் தேவை எழுகின்றது. இதனடிப்படையில்

எங்களது தன்னிறைவான வாழ்தலுக்கு தேவையான விடயங்களை முன்வை க்கும் பாடல்களின் உருவாக்கம் என்பது செயல்வாத நண்பர்களால் செயல்வாத முன்னெடுப்புக்களிலும், பயிற்சிப்பட்ட றைகளிலும் நம் மண்சார் மெட்டுக் களைக் கொண்டு உருவாக்கப்படு கின்றன.

இத்தகைய பாடல்கள் எங்கள் வாழ்தலின் சவால்களையும், நாம் விரும்பும் வாழ்வினை கட்டியெழுப்பும் முனைப்பினையும் வெளிப்படுத்து கின்றன. இத்தகைய செயல்வாதப் பாடல்கள் நூறுகோடி மக்களின் எழுச்சி 2022 இல் நண்பர்களால் பாடப்பட்டன.

## வன்முறையற்ற வாழ்விற்கான காண்பியக் கண்காட்சி - 2022



இக்காண்பியக் கண்காட்சியில் ஏழு ஓவியக்கலைஞர்கள் தங்கள் கலைப் படைப்புக்களைக் காட்சிப்படுத்து கின்றனர். அவை ஓவியங்களாகவும் தொகுப்பாக்கங்களாகவும் அமைகின்றன.

இக் காண்பியக்கலைப்படைப்புக்கள் யாவும் பொதுவாக “இயற்கை மீது நேசம் கொள்வோம், பெண்களுக்கு அவர்கள் உடல் மீது உள்ள உரிமை யைக் கொண்டாடுவோம்” என்ற தொனிப்பொருள்களில் அமைந்துள்ளன. எனினும் ஒவ்வொரு கலைஞர்களும் தமது கலைப்படைப்புக்களின் வாயிலாக தனித்தனியே கருத்துக்களை கூறுகின் றனர். முறையே,

“உடலுக்கும் மனதுக்கும் ஓய்வு தேவைப்படும் அனைத்து பெண்களுக் காகவும் எழுவோம்.

“பூமித்தாயையும் மரங்களையும் நேசிப்பதன் வாயிலாக மகிழ்வான வாழ்வினை வாழ்வோம்.

“இயற்கை மீது நாம் காட்டும் அக்கறையே இயற்கை எதிர்காலத்தில் எமக்கு பெற்றுத்தரும் சூழ்நிலைகளின் பிரதிபலிப்பாகின்றது. இயற்கையின் சக்தியே எமது பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைகின்றது.

“பெண்களின் உடல் உழைப்புப் போற்றப்படவும், மதிக்கப்படவும் வேண்டும். அவர்களது உழைப்பைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அவர்களுக்கே உண்டு.

“இயற்கையுடன் ஒன்றித்து வாழ்தலுக்கும் புரிதலுக்குமான ஞானத்தை நோக்கிய பயணம்

போன்ற கருத்தியல்கள் தொடர்பான காண்பிய கலைப்படைப்புக்களை இக் கண்காட்சியில் பார்வையிடக்கூடியதாக இருந்தது.

**பெண் உடலின் விடுதலைக்காக எழுச்சி கொள்வோம்!!!**

**பூமியின் உடலை பாதுகாக்க எழுச்சி கொள்வோம்!!!**

## நீதிக்கான பறை - சமதை பெண்ணிலைவாத நண்பிகள்



பறை சாதி என்ற அடிப்படையிலும், பெண்கள் பால்நிலை - பாலியல்புகள் என்ற அடிப்படையிலும் பாராபட்சங் களுக்குள்ளாகி ஒடுக்கப்படுகின்ற காரணத்தினால் இவற்றைக் களையும் நோக்கில் நீதிக்காகவும், வன்முறை களற்ற வாழ்விற்காகவும் பல காலம் போராடிக்கொண்டிருக்ககும் பெண்கள் நீதிக்கான வன்முறையற்ற வாழ்விற்கான ஊடகமாக பறைகளைக் கையிலெடுத்தோம்.

காலங்காலமாக பறை போன்ற தோல் வாத்தியங்களை பெண்கள் தொட்டுக் கையாள்வதை, வாசிப்பதை, எமது ஏற்றத்தாழ்வான சமூகக் கட்டமைப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. பெண்ணின் வலிமை, தூய்மை, பொது இடத்தில் பயிலல் என்பன இக்கட்டுப் பாட்டிற்கான காரணங்களாகக் காணப்படுகின்றன.

இவை தொடர்பில் எழுந்த கேள்வியும், இவ்வாத்தியத்தைக் கையாள்வதில் ஏற்படும் தயக்கமும், வெட்கமும் பறையை வாசிக்க வேண்டும் என்ற உத்வேகத்தைம் எங்களுக்குத் தந்தது. பறை எங்களுடைய இசை வாத்தியம். மாற்றத்தை விரும்புவோராக, மாற்றத்தை முதலில் எங்களுக்குள் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்தில் பறை பற்றிப் பல கலந்துரையாடல்களை எங்களது கருத்தியல் தளத்தில் மேற்கொண்டு 2014 யூலை மாதத்திலிருந்து எங்களுடைய பறைப் பயிற்சியை திருப்பெருந்துறை எனும் கிராமத்தில் ஆரம்பித்தோம்.

இச்சந்தர்ப்பத்தில் நூறு கோடி மக்களின் எழுச்சி சம்பந்தமான 2015 இற்கான கருப்பொருள் வெளியிடப் பட்டது. உலகலாவிய ரீதியில் உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்கள் மூன்றாவது வருடமாக 14.02.2015 அன்று பெண்களுக்கெதிரான வன்முறைகளை நிறுத்துவோம் என எழுச்சி கொள்ளும் வகையில் அவ் வருடக்கருப்பொருளாக” வன்முறை களுக்கெதிராகப் பறையறைவோம் என்பது அமைந்தது.

இந்நிலையில் எங்களுடைய பறைப் பயிற்சி OBR I நோக்கி பயணித்தது. நாமும் அணி திரள்வோம் - வன் முறைகளற்ற மகிழ்வான வாழ்விற்காய் படம் வரைவோம், ஆடுவோம், பாடுவோம், பறையறைவோம் என்ற தொனியின் அடிப்படையில் 2015 நூறுகோடி மக்களின் எழுச்சியை பறையறைந்து கொண்டாடினோம்.

இதன் தொடர்ச்சியாகவே நீதிக்கான பறையாக எங்கள் பறை செயல்வாதம் இன்றுவரை முன்னெடுக்கப்படுகின்றது.

## அளிக்கை



திருமணம் நம் சமூகத்தில் இருபாலாருக்கும் பொதுவானதாகும். ஆனால் விவாகரத்தில் முடியும் திருமண ங்களில் அதிக சமூகத் தாக்கம் ஏற்படுத்தப்படுவதுவது பெண்களின் மேலாகும்.

விவாகம் என்பது உடல் சார்ந்த இணைவின் வழிப்பாதையே அன்றி அதுவே கட்டாயமாகாது.

இவ்வாறிருக்க விவாகரத்தை சமூகம் அங்கீகரிக்கத்தவறுவது ஏன்?

இவ் விவாகரத்திலிருந்து மீண்டெழ பெண்களுக்கு எம் சமூகம் துணை புரியாதது ஏன்?

இங்கும் விவாகரத்தால் உளரீதியில் பாதிக்கப்பட்ட பெண்ணின் அழுகுரலும், அவளின் உடல் ரீதியான தாக்கமும், அதிலிருந்து மீண்டெழுவதற்கான உத்வேகமும், சமூகத்தின் அடையாளம் எனப்படும் விவாகக் குறியீடுகளை தகர்த்தெறிந்து துணிந்தெழும் மன தைரியமும் முன்வைக்கப்படுகிறது.

**தொகுப்பு**

**நிறோஷினிதேவி. ம**

**“மூன்றாவதுகண்”**
**உள்ளூர் அறிவு திறன்**
**செயற்பாட்டுக் குழு**

# எங்கள் இல்லத்தில் – நூறு கோடி மக்களின் எழுச்சி – 2022

**பெண் உடலின் விடுதலைக்காக எழுச்சி கொள்வோம்!!!**

**பூமியின் உடலைப் பாதுகாக்க எழுச்சி கொள்வோம்!!!**

பூமி இயல்பாகவே பல்வேறு சிறப்பம்சங்களைத் தன்னகத்தே கொண்டு காணப்படுவதுடன் அதில் வாழும் உயிரினங்களிற்கு வாழ் விடமாகவும் திகழ்கின்றது. மனித குலத்தின் இயற்கைக்கு மாறுபட்ட முறையற்ற செயற்பாடுகளால் பூமி பல்வேறு சிதைவுகளுக்குள்ளாகி இயற்கை சமநிலையும் மாற்றமடைந்து வருகின்றது. தாவரங்களின் இயல்புகள் மாற்றியமைக்கப்படுவதாலும், விவசாயத் திற்காகச் செயற்கை உரங்கள் இடப் படுவதாலும் மண்ணின் தரம் பாதிக்கப்படுவதுடன் விளைநிலங்களில் இருந்து பெறப்படும் உற்பத்திப் பொருட்கள் இரசாயன பதார்த்தங்களை உள்வாங்கி வளர்வதால் அவற்றை மனிதர்கள் உண்டு பல்வேறு உபாதைக ளுக்கு உள்ளாகின்றனர். அதேவேளை இயற்கை உரங்களில் உள்ள இயல்பான தன்மைகளை கொண்டு வளரும் தாவரங்கள் பல்வேறு கனிமங்களை உள்வாங்கி வளர்வதுடன் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குபவையாகவும் காணப்படுகின்றன. இவற்றின் அவசிய த்தை இன்றைய தலைமுறையினர் மத்தியில் கொண்டு சென்று விழிப் புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை காணப் படுகின்றது.

பூமியைப் போலவே பெண்களும் பல்வேறுபட்ட விசேட இயல்புகளைக் கொண்டு காணப்படுகின்றனர். அவ் வகையில் பெண்களின் இயல்பான குணங்கள் சமுதாயத்தில் உள்ள வர்களால் சிந்தனை ரீதியாகவும், உடல் ரீதியாகவும் கட்டுப்படுத்தப்படுகின்றன. சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை வன்முறைக்கு உட்படுத்தப்படுவதால் அவர்களின் இயல்பான வாழ்க்கை முறை அன்றாடம் பாதிப்புக்குள்ளாகிய வண்ணமே காணப்படுகின்றது. பூமியையும், பெண்களையும் வன்மு றைக்குட்படுத்தாது மனிதர்கள் அனைவரும் இணைந்து வாழ்தல் எனும் தொனியில் அனைத்துலகிலும் உள்ள மனிதர்கள் மீதான வன்முறையற்ற வாழ்தலை அடிப்படையாகக் கொண்டு நூறு கோடி மக்களின் எழுச்சி திட்டம் வருடாவருடம் பெப்ரவரி 14ஆம் திகதி இடம்பெற்று வருகின்றது.

அதனை மையப்படுத்தி பல்வேறு செயல் திட்டங்கள் உலகளாவிய ரீதியில் இடம் பெற்று வருகின்றன. அதன் ஒரு அங்கமாக குடும்பங்கள் மத்தியிலுள்ள இளைய தலைமுறையினருக்கு வன்முறையற்ற வாழ்வை கொண்டு செல்ல வேண்டிய அவசியம் நிலவுகின்றது. இன்றைய தலைமு றையினர் எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களாகவும் சமூகத்தினை வழிநடத்திச் செல்பவர்களாகவும் காணப்படுகின்றனர். அதனடிப்படையில் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி வவுனியாவில் உள்ள எமது இல்லத்தில் அயலில் உள்ள சிறுவர்க ளையும், குடும்ப உறுப்பினர்களையும் இணைத்து கலைச் செயல்வாதம் முன்னெடுக்கப்பட்டது.



அதன் ஆரம்ப நிகழ்வாக ஒரு சில நிமிடம் அமைதி பேணப்பட்டது. பின்பு நூறு கோடி மக்களின் எழுச்சித் திட்டம் வாசிக்கப்பட்டு அது தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன. சிறுவர்கள் மத்தியில் கொண்டு செல்வ தற்காக அவர்களுக்கு விருப்பமான கலைச் செயற்பாடுகளூடாக முன்னெ டுக்கப்பட்டது. அதில் ஒரு கட்டமாக களிமண் எடுத்து வரப்பட்டு சிப்போட் மீது பூசப்பட்டது. களிமண் பூசப்பட்டதன் நோக்கம் இயற்கையால் சூழப்பட்ட பூமியின் சிறப்பையும் அவற்றிலுள்ள நன்மையான விடயங்களையும் எடுத்து கூறுவதாகும். பூமியையும், பெண்ணின் முகத்தின் தோற்றத்தையும் எடுத்துக்காட் டுவதாக களிமண் கொண்டு மேற்பரப்பு வடிவமைக்கப்பட்டது. சுற்றுச் சூழலில் உள்ள இயற்கைத் தாவரங்களின் பகுதிகள் கொண்டு பெண்ணின் உருவம் அலங்கரிக்கப்பட்டது. இதன் மையக் கருத்தாக பெண்கள் இயற்கையாகவே அழகானவர்கள் அதுபோன்றே பூமித்தாயும் காணப்படுகின்றாள் மண்ணை நேசிப்பது போன்றே பெண்ணை நேசிக்க வேண்டும். அவர்களின் இயல்பான குணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு வடிவமைக்கப் பட்டது. இவ் வடிமைப்பை உருவாக்கு வதற்காக சிறுவர்கள் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்டிருந்தார்கள்.

உலகில் பல்வேறு காப்றேட் கம்பெ னிகளும் காலனித்துவ வாதிகளின் உருவாக்கமும் சில கட்டமைப்பை வகுத்துள்ளன. தமது உற்பத்திகளை விநியோகப்படுத்தவும், மக்கள் மத்தியில் கொண்டு செல்லவும் பல்வேறு தந்ரோபாயங்களை மேற்கொண்டு வருகின்றன. பெண்களை அழகுபடுத்து வதற்காக அழகுசாதன உற்பத்திகள் எனும் பெயரில் பல்வேறு இரசாயனப் பொருட்களையும், மண்ணை வளப்படுத்தும் நோக்கில் பல்வேறு இரசாயன பதார்த்தங்களை உற்பத்தி செய்து மக்களை உள்ளார்ந்த ரீதியாக மாற்றியமைத்து தமது பொருட்கள் தரமானவை என்னும் மாயையை உருவாக்கி விற்பனை செய்து வருகின்ற னர். இவ்வாறான போலிக் கட்டமைப் புகளை சிந்தனை ரீதியாக உடைத்து இயற்கைப் படைப்பின் இயல்பான விடயங்களை எடுத்துக் கூறுவதாக மண்ணின் நிறம் இயற்கை பொருட்கள் பயன்படுத்தப்பட்டு பூமித்தாயின் உருவத்தில் பெண்ணின் தோற்றம் வெளிப்படும் வகையில் வடிவமைக்கப் பட்டது. இச் செயற்பாட்டின் மூலம் அவர்களால் எளிதில் புரிந்து கொள்ளும் காண்பியமாக வடிவமைக்கப்பட்டு காயவைக்கப்பட்டது.

தேநீர் இடைவேளையின் போது சிவப்பு செம்பருத்தி பூக்கள் பயன் படுத்தி தேநீர் தயாரிக்கப்பட்டது. அதன் போது கற்பூரவள்ளி, துளசி போன்ற சில மூலிகை தாவரங்களில் தேநீர் தயாரிக்கும் முறை பற்றி கற்றுக் கொடுக்கப்பட்டது. அவற்றில் காணப்படும் மூலிகையின் தன்மைகள், உடலில் ஏற்படும் நன்மையான விடயங்கள் பற்றியும் எடுத்துக் கூறப் பட்டது. பின்பு தேநீர் இடைவேளையைத் தொடர்ந்து நூறுகோடி மக்களின் எழுச்சிக்ககாக தயாரிக்கப்பட்டிருந்த "சங்கிலியை உடை" எனும் வாசகம் கவிதை நடையில் அனைவராலும் வாசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆங்கில மொழி பெயர்ப்பில் அமைந்த பாடல், நடனக் காட்சி "Break the chain" One Billion Rising திரையிடப்பட்டது. அனைவரும் இணைந்து இயல்பான முறையில் சுதந்திரமாக செயற்பட்டு நடனமாடினார்கள். நடன நிறைவை தொடர்ந்து மதிய போசனம்

இடம்பெற்றது. மதிய உணவிற்காக வீட்டுத்தோட்டத்தில் இயற்கை முறையில் வளர்க்கப்பட்ட காய்கறிகள், கீரைகள் போன்றவற்றில் தயாரிக்கப்பட்ட உணவுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. அனைத்து சிறுவர்களும் ஒன்றாக அமர்ந்து வாழை இலையில் இட்டு மகிழ்வுடன் உணவருந்தினார்கள். இதன் போது நஞ்சற்ற உணவு பழக்கவழக்கம் மற்றும் வீட்டுத்தோட்டத்தால் பெறப்படும் நன்மைகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டது.

சில இயற்கைத் தானிய விதைகள் நடுகைக்காக சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. இவை சிறுவர்களினால் பயிரிடப்பட்டன. அதனுடன் இணைந்து நீண்டகாலப் பயன்தரும் தென்னை மரங்களும் நடப்பட்டது. மீண்டும் சிறுவர்கள் காயவைக்கப்பட்ட ஓவியத்தினைப் பார்வை இடுவதற்கு அழைத்துவரப்பட்டனர். நன்றாகக் காய்ந்த நிலையில் சிறிய துண்டங்களாக பிளவுபட்டு காணப்பட்டது. பூமியில் காணப்படும் தாவரங்கள் அழிக்கப்பட்டால் மண் தரை வறள் நிலமாக நீர் இன்றி எப்படி தோற்றம் அளிக்குமோ அவ்வாறு தோற்றமளித்தது. இரசாயனக் கழிவுகளால் எதிர்காலத்தில் விவசாய நிலங்கள் தரிசு நிலம் ஆகுதல் தொடர்பாகவும், பூமி மீது இடம்பெறும் வன்முறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன. செயற்கையான பொருட்கள் ஆரம்பத்தில் அதிக நன்மைகளை கொடுப்பது போல் தோற்றமளித்தாலும் இறுதியில் மிகப்பெரும்பாலும் பாதகமான பக்கவிளைவுகளையே உருவாக்கும். இயற்கை அப்படியல்ல தாமதமாகப் பயன்களை கொடுத்தாலும் நன்மையான விளைவுகளையே தரும் என விளக்கமளிக்கப்பட்டது.

பெண்கள் மீது அழகு, நிறம், தோற்றம் பற்றிச் செயற்கையாகக் கட்டமைக்கப்பட்ட விடயங்களால் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் வன்முறைக்குட்படுத்தப்படும் பெண்கள் உடல், உளரீதியாக எதிர்நோக்கும் பாதிப்புகள் பற்றி கலந்துரையாடப்பட்டன. இவ்வாறான செயற்பாடுகளில் இருந்து பெண்களையும், சிறுவர்களையும் மீட்டெடுத்து சுதந்திரமாகச் செயற்பட வழியமைக்கப்பட வேண்டும். அதனடிப்படையில் சிறுவர்களுக்கான சில விளையாட்டு நிகழ்வுகளுக்கூடாக கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அவர்கள் சுதந்திரமாகச் செயற்பட்டு ஆடல், பாடல் நிகழ்வுகளிலும் ஈடுபட்டனர். அன்றைய தினம் பயனுள்ளதாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் அமைந்திருந்தது. அவர்களின் மனதில் கலைச் செயல்வாதமாக முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் ஆழமாக ஊறி இருந்ததை தொடர்ந்து வந்த நாட்களில் அவதானிக்க முடிந்தது. குடும்பத்தவர்களிடமும் நண்பர்களிடமும் இவ் நிகழ்வு பற்றி குறிப்பிட்டனர். இத்தகைய செயற்பாடுகள் வீடுகளில் சிந்திக்கவும், செயற்படவும் வழிசமைக்கின்றது. இக் கலைச் செயல்வாதம் மாற்றத்திற்கான அடிப்படையாகவும் அமைந்தது.

பெண்களும், சிறுமிகளும், பூவுலகும் ஒருவருடன் ஒருவர் கூட்டிணைவாக செழிப்புறும் எதிர்காலத்துக்காக எழுவோம்!

**ச.மகிழினி**
**வவுனியா**

## சமத்துவம் சமத்துவம்

**(பாடல்)**

சமத்துவம் சமத்துவம்
சமத்துவமாய் வாழ்ந்து
காட்டுவோம்
வாழ்வோம் வாழ்வோம் வாழ்வோம்
உரிமை கொண்டு வாழ்வோம்
உரிமை கொண்டு வாழ்ந்து
காட்டுவோம்.

பண்பாடு என்பது
வெளித்தோற்றத்தில் இல்லை
உண்மை நேர்மை வாய்மை
கொண்ட வாழ்தலே பெருமை
ஒடுக்குமுறை செய்யாத மனிதமே
தேவை - அப்
பண்பாட்டைப் படைத்தல்
எம் மக்களின் தேவை
(சமத்துவம்... சமத்துவம்....)

எங்கள் உரிமை எங்களது
என்று கூவுவோம்
மற்றவரும் உரிமை கொண்டு
வாழக்கூடுவோம்
பிரிதலன்றி நட்புடனே
புரிதல் கொள்ளுவோம்
பல்மனிதர் - பல்லுயிர்கள்
சேர்ந்தே வாழுவோம்
(சமத்துவம்... சமத்துவம்....)

அறிவு திறன் ஆற்றல் கொண்ட
வாழ்தல் காணுவோம்
பகுத்தறிவு கொண்டு
அடிமைத்தளைகள் நீக்குவோம்
போலி மாயைப் பெருமைகளை
நீக்கி எழுவோம்
சமத்துவத்தை எங்கள்
பண்பாடாய்க் கொள்ளுவோம்.
(சமத்துவம்... சமத்துவம்....)

**கமலா வாசுகி (OBR -2022)**

## எங்கள் உடல்

**(கவிதை)**

கவர்ச்சி உடலாக்கியும்
துடக்குடலாக்கியும்
நெடுகிலும் அலைந்தோம்

எங்கள் உடல்கள்
எதற்கோ எவருக்கோ
யாருக்கோ ஆயின

முள்ளந்தண்டிலிருந்து
படைக்கப்பட்டதாலும்
கால் மேல் தூக்கி ஆடின்
கற்பற்றவளாய் ஆக்கப்பட்டதன்
நீட்சியிலும்..

எங்கள் உடல்கள்
எதற்கோ எவருக்கோ
யாருக்கோ ஆயின

உதிரம் வடியும் துடக்கு உடலில்
யோனி கிழித்து வெளிவரும்
சிசுவும்
துடக்கு இரத்தமும்
நாங்கள் மீண்டும் புது ஜந்துவாய்
பிறப்பெடுப்போம்

மீண்டும் மீண்டும்
எங்கள் துடக்கு உடல்கள்
மாதம் மாதம் இரத்தம் வழிந்தோட

கோயிலுக்கு ஆகாது
சாமிவீட்டுக்கு ஆகாது
நல்ல காரியத்திற்கு ஆகாது

எங்கள் உடல்கள்
உயிர்க்கும் உயிர்களின் போசனை
வளர்ந்து பெருத்த பூமிப் பந்தின்
உயிர்ப்பு

அவள் அவன் அவர்கள்
அது அவை அனைத்தினும்
மூலம்

உயிர் துடிக்கும்
உலகு காக்கும்
அட்சயப் போசனை

எங்கள் உடல்களைக்
கொண்டாடுவோம்
பாடுவோம் ஆடுவோம்
வரைவோம் பறையறைவோம்
பதிய மொழியில்
புதிய பாடலாய்
நாங்கள்

எங்கள் உடல்
எங்கள் ஆசை
எங்கள் உடல்
எங்கள் கனவு
எங்கள் உடல்
எங்கள் இருப்பின் சாட்சி

**கலாவதி கலைமகள் (OBR -2022)**

## சின்ன மக்களே...

(பாடல்)

**இயற்கை :**
சின்ன மக்களே என்
செல்ல மக்களே
இயற்கை என்
கதையைக் கேளீரோ?

**மனிதர் :**
அம்மா இயற்கையே
என் அழகு இயற்கையே
உந்தனின் கதை
கேட்க நின்றேனே

**இயற்கை :**
ஐயோ பிளாஸ்டிக்
ஆகாது போடாதே - என்
மேனி எங்கும்
காயங்கள் தராதே
ஒரு நாளில் பாவித்து நீ
எறியும் குப்பைகளால் நான்
அழிந்து போகிறதைக்
காணாயோ???

**மனிதர் :**
அம்மா இயற்கையே
அற்புத இயற்கையே
தவறு என்ன நான்
செய்தேன் சொல்வீரே

**இயற்கை :**
சின்ன மக்களே என்
செல்ல மக்களே
உங்களுக்காய் மட்டும்
நான் இல்லையே .
இந்த நிலம் காற்று
தண்ணீர் ஆகாயம்
எல்லாத்துக்கும் சொந்தம்
அது தெரியுமா
சின்னக் கிருமி பெரும் சிறுத்தை
குருவி மீன்கள் மரம் செடிகள்
எல்லாத்துக்கும் நான்
பொதுமை புரியுமா?

**மனிதர் :**
அம்மா இயற்கையே - உன்
அற்புதப் படைப்பிலே
நானோர் சிறு பகுதி கண்டேனே

**இயற்கை :**
அழித்தல் நிறுத்துவீர் -
அறிவைப் பெருக்குவீர்
எல்லாமாக நான் இருப்பேன்
அறிவீரே!
சின்ன மக்களே என்
செல்ல மக்களே
இயற்கை என்
சொல்லைக் கேட்பீரே!

**கமலா வாசுகி** (OBR -2021)
(சின்ன மாமியே பாடல் மெட்டு)

## அன்பும் அறமும் கொண்ட உணவு

தோட்டம் செய்வோமே -
தோட்டம் செய்வோமே
பள்ளிக்குப் போய் வந்து
தோட்டம் செய்வோமே

அட வாங்கோ நண்பர்களே எம்
அருமை நண்பர்களே
பள்ளிக்குப் போய் வந்து
தோட்டம் செய்வோமே

ஆமாம் நல்ல உணவு
நமக்கு வேண்டுமே
இயற்கையான உணவு
நமக்கு வேண்டுமே

நஞ்சடிக்கா நல் உணவு நம்
நிலத்தில் நாம் நட்டு
நோயற்ற வாழ்வு காண்போம்
நண்பர்களே!

(தோட்டம் செய்வோமே)

லாபம் மட்டும் வாழ்க்கையல்ல
நண்பர்களே!
அன்பும் அறமும் வேண்டும்
உணவில் அன்பர்களே!
கப்பலேறி இங்கு வந்து காசு
பறிக்கும் சாப்பாட்டை
கைவிடுகின்ற காலம் ஒன்று
வராதோ???

(தோட்டம் செய்வோமே)

பூட்டன் பூட்டி போட்ட பயிரின்
விதையிது
நம் மண்ணுக்குச் சொந்தமான
விதையிது
அன்பு கொண்டு பயிர்கள்
செய்வோம்... அறத்துடனே
பகிர்ந்திடுவோம்
பூமித்தாயை மதித்து நாமும்
வாழ்வோமே!

(தோட்டம் செய்வோமே)

**கமலா வாசுகி** (OBR -2021)

## அன்பான சொல் பகிர்ந்து...

தென்னானே நாதிந்தம் நோதே
நாதிந்தம் தென்தினம் தென்னானே

அன்பான சொல் பகிர்ந்து
அனைவரும்
ஒன்றாய் வாழ்ந்திடுவோம்
வன்முறைகள் செய்யாத வாழ்தலை
நாமும் வாழ்ந்திடுவோம்.

கடும் கோபம் கொள்ளாது
கனிவுடன் நாம் பழகிடுவோம்.
சமத்துவமாய் வாழ்தல் தனில்
சந்தோசம் கண்டிடுவோம்..

தென்னானே நாதிந்தம் நோதே
நாதிந்தம் தென்தினம் தென்னானே

**ரொஷானி, ஜெயபிரதாப்** (OBR -2021)

## அழகான சூழலிலே...

தென்னானே நாதிந்தம் நோதே
நாதிந்தம் தென்தினம் தென்னானே

அழகான சூழலிலே நாம்
இணைந்து வாழ்ந்திடுவோம்
நஞ்சற்ற உணவுகளால் நலம்
நாங்கள் பெற்றிடுவோம்

இயற்கை தன்னை நஞ்சாக்கும்
உரங்களை நாம் வெறுத்திடுவோம்.
எச்சம் சாணி குப்பை சேர்த்து
கூட்டுப் பசளை செய்திடுவோம்.

தென்னானே நாதி.......

நூடில்ஸ் பாணும் கோதுமையும்
தினமும் உண்ண மாட்டோம் நாம்
பக்கற் உணவும் பால்மாவும்
சிறப்பென்றெண்ண
மாட்டோம் நாம்....

நம் மரக்கறி அரிசி தேங்காய்
உடன்பாலும் உண்போம் நாம்
பாரம்பரிய பழ வகைகளை
மீண்டும்
உணவில் சேர்ப்போம் நாம்.

தென்னானே நாதி.......

தினை உழுந்து குரக்கன் வரகு
தானியங்கள் விதைத்திடுவோம்.
இலை குழைகள் கீரை வகை
எம் வேலியில் பெற்றிடுவோம்.

மரவள்ளியும் கிழங்கு வகையும்
வளர்த்து நாங்கள் வளம்
பெறுவோம்
நாட்டுக்கோழி நண்டு
மீன்கள் நாங்கள்
உண்டு வாழ்ந்திடுவோம்.

தென்னானே நாதி.......

அழகான சூழலிலே நாம்
இணைந்து வாழ்ந்திடுவோம்
நம் நாட்டின் உணவுகளால்
நலம் நாங்கள் பெற்றிடுவோம்

**ரொஷானி, ஜெயபிரதாப்** (OBR -2021)

**நூறு கோடி மக்களின் எழுச்சி நிகழ்ச்சிக்காக ஆக்கப்பட்டு பாடப்பட்டு வரும் பாடல்கள்.**

# பெண்களை இலக்கு வைக்கும் வணிகர்கள்.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற காலத்தில் அகத்துக்கும் முகத்துக்குமான நெருக்கம் பேணப்பட்டது. அகம் இல்லாமல் முகம் இல்லை முகம் இல்லாமல் அகமில்லை என்ற காலம் கடல் தாண்டி இன்று அகத்துக்கும் முகத்துக்குமான உறவு வேரறுக்கப்பட்டு அகம் வேறு முகம் வேறாக்கப்பட்டுள்ளது. பெண்கள் எப்பொழுதும் தங்களை அழகாய் வைத்திருப்பது யதார்த்தம். இதையே குறிவைத்துத் தாக்கும் நுகர்வுப் பண்பாடு பெண்களை ஒரு காட்சிப் பொருளாக கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்து அழகு பார்க்கின்றது. பெண்களின் சிந்தனைகள் இன்று குறுகிய வட்டத்துக்குள் வைத்துப் பூட்டப்பட்டுள்ளது.

சினிமா, சின்னத்திரை மோகம் பெண்களை அதிகம் ஈர்த்துள்ளது. இதற்கு ஏற்றாற்போல் சினிமா, சின்னத்திரை நடிகர்களிடம் பேட்டிகள் என்ற பெயரில் அவர்கள் எதைப் பேச வேண்டும்? எதைக் கேட்க வேண்டும்? எவ்வாறு இருக்க வேண்டும்? எவற்றை உடுத்த வேண்டும் என்ற அனைத்துவித தீர்மானங்களையும் தொலைக்காட்சி நிறுவனங்களே எடுக்கின்றன. இதன் போலித்தன்மையை உணராத நாம் அடி முட்டாளாக்கப்படுகின்றோம். இந்நாடகங்களும், திரைப்படங்களும் எதற்காக போட்டி போட்டு திரையிடப்படுகின்றன? நிற்க. இதன் பின்னால் உள்ள வணிக நிறுவனங்கள் எவை? இதற்காக இந்நிறுவனங்கள் என்ன செய்கின்றன? இதைப்பற்றி எப்பொழுதாவது சிந்தித்ததுண்டா? இவை நிதானித்து சிந்தனையில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை.

பெண் என்பவள், தான் இயற்கையின் தனித்துவமான சக்தி என்பதை உணரத் தொடங்கும்பொழுது சாதிக்க துணிந்தெழுகிறாள். பல தசாப்தங்களாக பெண் என்பவள் ஒரு பொருளாக பயன்படுத்தப்பட்டு வருகிறாள். சமூகத்திலும், மத அனுஸ்டானங்களிலும் பெண்கள் மீதான பார்வை சற்றுக் குறுகியதாக இருந்தாலும் அரசியல், பொருளாதார, வணிக நோக்கில் பெண் மீதான பார்வை அகல விரிந்துள்ளது. வருமானத்துக்காகப் பெண்களின் உடல் மற்றும் அவர்களின் அழகில் மாயைகளை உருவாக்கி உலகளாவிய ரீதியில் பெரு வணிக வலைப்பின்னல்கள் பின்னப்பட்டு பெண் என்பவள் மீண்டெழ முடியாத பாதாளத்துக்குள் தள்ளப்பட்டுள்ளாள். இதுபோக இன, மத, சமூக ஆதிக்கங்களுக்குள் சிக்கி மீண்டெழா வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளாள்.

பெண்ணே!

இந்த உலக மாயைக்குள் சிக்கிக் கொண்டிருப்பதை நீ உணர்ந்து விட்டாயா? எழுந்து வா! உனக்கான தனித்துவமான உலகைக் கட்டியாள!

பெண்ணே! நீ எழுச்சி கொள்.

பெண்ணே! நீ உயர்ச்சி கொள்.

பெண்ணே! நீ இப் பூமியில் புதிதாய் புதிதாய் மலர்வாய்.

**அ.ஆன் நிவேத்திகா.**

## சமத்துவத்திற்கான (நூறுகோடி மக்களின் எழுச்சிக்கான) கோசம்

அன்பை வளர்க்க - எழுவோம்
எழுவோம்
உயிர்கள் காக்க - எழுவோம்
எழுவோம்

எங்கள் வாழ்வு எங்கள் உரிமை - என்று சொல்லி
எழுவோம் எழுவோம்
மற்றவர்களை ஒடுக்காத - பண்பாடு கொண்டு
எழுவோம் எழுவோம்

இனங்கள் தாண்டி மதங்கள் தாண்டி - மனிதம் காக்க எழுவோம்
எழுவோம்

அனைவர் மீதும் அக்கறை கொண்ட பண்பாட்டுக்காய்
எழுவோம் எழுவோம்

அனைத்து உயிரையும் மதிக்கும் - புதுப் பண்பாட்டுக்காய்
எழுவோம் எழுவோம்

வன்முறை நீக்கி - எழுவோம்
எழுவோம்
நீதி ஓங்க - எழுவோம் எழுவோம்
சமத்துவம் பெருக - எழுவோம்
எழுவோம்
உரிமைகளுக்காய் - எழுவோம்
எழுவோம்

அன்பும் அறமும் பெருகும் - புதுப் பண்பாட்டுக்காய்
எழுவோம் எழுவோம்

**கமலா வாசுகி (OBR -2022)**

## அவள் தாயானவள்

**(கவிதை)**

குழந்தைகளில்
ஒன்று நிலத்தில்
ஒன்று நீரில்
மற்றையது காற்றில்
எல்லாம் ஒன்றோடு ஒன்று
இணைந்து
ஒன்றை ஒன்று உணவாக்கியும்
ஒன்றை ஒன்று நேசித்தும்
அழிந்தும் வளர்ந்தும்
வளர்ந்தும் தேய்ந்தும்
தேய்ந்தும் உயிர்த்தும்
ஒன்றோடு ஒன்று தங்கியும்
ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டும்

எல்லாம் இணைந்தது அவள் உலகு

ஒரு குழந்தை இரண்டு காலிலும்
இன்னொன்று மூன்று காலில்
மற்றையது நாலு காலிலும்
ஊர்ந்தும் தவழ்ந்தும் பறந்தும்
அவள் மடியில் உருண்டன
பிரண்டன

பல்லுயிரும் இணைந்ததே அவள்
உலகு

மழை பொழிவதும்
சுனை சுரப்பதும்
கடல் பெருகுவதும்
அழிவது உயிர் கொள்வதும்
அவள் இயற்கையானவள்

பல்நெடு தசாப்தம்
உயிர் பேணி உலகாய் நின்றாள்
நிலம், நீர், காற்று, ஆகாயம்
எல்லாம் அவளாய்
அவள் தாயானவள்

குழந்தைகள் வளர்ந்தன
ஓரறிவு
ஈரறிவு
மூவறிவு
நாலறிவு
ஐந்தறிவு
ஆறறிவு
ஆறறிவு மட்டும்
எழுந்து நடந்தது ஓடியது தாவியது
பாய்ந்தது
பிரித்தறிந்தது பகுப்பாய்வு செய்தது
கண்டு பிடித்தது
விஞ்ஞானம் என்றது
நவீனம் என்றது
பல்லுயிர்களையும் விரட்டியது
உருமாற்றியது
வளர்ச்சி என்றது
அபிவிருத்தி என்றது
இறுமாப்படைந்தது எல்லாம்
தனக்கானதாய்

தாய் சிரித்தாள் வருந்தினாள்
படைத்ததில் ஒன்று தலைகீழ்

அவளுக்குத் தெரியும்
ஒன்று பிழைத்தால் எல்லாம்
அழியும்

வெள்ளம்
வரட்சி
நில நடுக்கம்
எல்லாம் வந்தது
ஒன்றால் எல்லாம் அழிந்தது

அவள் தாயானவள்
உயிர்ப்பும் அழிவும்
அவள் இயல்பு

**கலாவதி கலைமகள் (OBR 2021)**

## கொவிட் சூழலில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுடன் நடைபெற்ற

# நூறு கோடி மக்களின் எழுச்சி – 2021

இந்தப்பூமியின் வரலாற்றில் மனிதனின் பேராசையும் அதனால் விருத்தி பெற்ற ஆதிக்கமும் பூமியின் பன்மைத்துவத்தையும் அதன் பேரழகையும் ஆபத்தான திசை நோக்கி நகர்த்தி வரும் பின்னணியில் பூமியையும் அதன் பல்லுயிர்ப் பண்பாட்டையும் பாதுகாக்கும் நோக்குடன் சாதாரண மக்கள் தனியாகவும் குழுக்களாகவும் உலகம் எங்கும் இயங்கி வருகின்ற வரலாற்றை நாங்கள் கற்றறிந்து வருகின்றோம்.

அதிகாரம் அற்றவர்களாய் மனிதனின் பேராசை எனும் அழித்தொழிக்கும் செயற்பாடுகளுக்கும் அதனால் விருத்திபெறும் சிந்தனைகளுக்கும் எதிராக மிகப்பெரும்பாலும் பெண்கள் தமது நாளாந்த நடவடிக்கைகள் மூலமாகத் தங்களது போராட்டத்தை நிகழ்த்திய வண்ணமாகவே வாழுகின்றார்கள்.

சமூகம் எனும் கட்டமைப்பின் நுண்ணிய கூறாக விளங்கும் குடும்பம் எனும் சிறு அலகினுள்ளேயே மரபு, பண்பாடு எனும் பெயரில் நெல்லில் உமி போலக் கலந்துள்ள ஆதிக்கம், அதிகாரம், கோபம், வெறுப்பு, குரோதம், பழிக்குப்பழி, வக்கிரம், தாட்வீகம், அழித்தல் எனும் செயற்பாடுகளுக்கும் சிந்தனைகளுக்கும் மாற்றாக அன்பு, சமாதானம், அரவணைப்பு, அடைக்கலம், தார்மீகம், புரிந்துணர்வு, அகிம்சை, ஆக்கம் எனும் செயற்பாடுகளை மேற்கொண்டு நல்ல மனிதர்களை உருவாக்குவதில் பெண்களின் பங்களிப்பு அதிகமாகவே இருந்து வருகின்றது. இதன் காரணமாகவே மேலாதிக்கச் சிந்தனைகள் பல்வேறு நிலைகளிலும் ஆக்கிரமித்துள்ள இன்றைய சூழலிலும் ஆக்கபூர்வமான மனிதர்களைக் காணக்கிடைக்கின்றது எனலாம்.

அதாவது தன்னலத்தையும், அதிகாரத்தையும், பேராசையினையும் இலக்காகக் கொண்டதான பொதுப்பண்பாடு உத்தியோகபூர்வமானதாக ஆதிக்கம் பெற்றுள்ள விசச்சூழலில் ஆக்கபூர்மான மனிதர்களைக் காணும்போதும், அவர்களுடன் தொடர்பாடும்போதும் இத்தகைய மனிதர்களைத் தோற்றுவித்து வளர்ப்பதற்காகத் தமது உழைப்புக்கு அதிகாரபூர்வப் பெறுமதியற்று வாழ்நாள் முழுவதும் உழைத்துக் கொண்டேயிருக்கும் பெண்களின் மகத்துவத்தை உய்த்துணர முடிகின்றது.

பேராசையும் அழித்தொழித்தலும் மனிதனின் இயல்புகளாக விருத்தியாக்கப்படும் பின்னணியில் மனித குலத்தின் தொடர்ச்சியையும் அதன் ஆக்கபூர்வமான தன்மையினையும் உயிர்ப்புக்கெடாமல் பாதுகாத்து வருவதில் பெண்ணிலைச் சிந்தனைகளும் பெண்களின் இயக்கமும் பலமான தாக்கத்தைச் செலுத்தி வருகின்றன. மனிதனின் மேலாதிக்கம் கோலோச்சும் இன்றைய சூழலில் புலன்களுக்குள் இலேசாகப் புகாத, கண்ணுக்குத் தெரியாத, தொட்டுணர முடியாத நடவடிக்கைகளாகவே பெண்ணிலை நோக்கிலான நடவடிக்கைகள் பலவும் இடம்பெற்று வருகின்றன.



இவ்வாறு இந்த உலகத்தின் இருப்புக்கும் உயிர்களின் நல்வாழ்விற்கும் நாளொரு வண்ணமாகவும் பொழுதொரு மேனியாகவும் ஆக்கபூர்வமாகப் பங்களித்துவரும் பெண்ணிலைச் சிந்தனையாளர்களால் வடிவமைக்கப்பட்டு உலகத்தின் உயிர் இருப்பிற்காக உலகந்தழுவி மேற்கொள்ளப்படும் செயல்வாதமே நூறு கோடி மக்களின் எழுச்சி செயற்பாடாகும்.

கடந்த 2013 ஆம் வருடத்திலிருந்து இச்செயற்பாடு உலகம் முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பெண்களை வன்முறைக்கு உட்படுத்தாத மனித சமூகத்தை உருவாக்கும் எத்தனத்துடன் மேற்கொள்ளப்படும் இச்செயல்வாதமானது பூமிக்கும் அதில் வாழும் சகல உயிரினங்களுக்குமான வாழ்தலை வலியுறுத்தும் பெண்ணிலைவாதத்தின் உன்னதமான சிந்தனையுடன் வருடா வருடம் ஒவ்வொரு தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வுலகில் மூன்றில் ஒரு பெண் தனது வாழ்க்கைக் காலத்தில் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றாள். 2012 ஆம் ஆண்டின் உலக சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை அறுநூறு கோடியாக இருந்துள்ளது. அப்படியாயின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட பாதித் தொகையினராகிய முந்நூறு கோடிப் பெண்களில் நூறு கோடிப் பெண்கள் வன்முறைக்கு உட்படுகின்றார்கள். இதனை மாற்றுவதற்காக உலகெங்குமுள்ள நூறு கோடி மக்கள் எழுச்சி கொள்வோம், ஆடுவோம், பாடுவோம், கலைகளினூடாக மகிழ்வான வாழ்தலை உருவாக்குவோம் என்பதே இந்த எழுச்சியின் தொனிப்பொருள் ஆகும். இது 2013 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் மாசி 14 இல் கொண்டாடப்பட்டு வருகின்றது. இலங்கையிலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து இந்த எழுச்சி தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இவ்வருடமும் (2021) உலகம் எங்கிலும் இச்செயல்வாதத்தில் கைகோர்த்துள்ள மனிதர்கள் தத்தமது சக்திக்குட்பட்டு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொண்டு அதன் அனுபவங்களைப் பொது வெளியில் பகிர்ந்து வருகின்றார்கள். விசேடமாக கடந்த ஆண்டிலிருந்து கொவிட் தொற்றுக் காரணமாக உலகின் நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ள நிலையில் காலத்தின் தேவையுணர்ந்து நூறு கோடி மக்களின் எழுச்சியை இச்செயற்பாட்டாளர்கள் திட்டமிட்டு முன்னெடுத்துள்ளார்கள். அந்தவகையில் மரபணு மாற்றஞ் செய்யப்படாத உள்ளூர் விதையினங்களைப் பாவனைக்குக் கொண்டு வருதல், அதனை ஒவ்வொரு

மனிதரும் தாம் வாழும் வீட்டுச் சூழலிலிருந்து செயற்படுத்துதல் எனும் நடவடிக்கையூடாக இச்செயல்வாதம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இன்றைய காலத்தில் இயற்கை விவசாயம் என்று பெருவாரியாக மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகளில் மரபணு மாற்றஞ் செய்யப்பட்ட பயிரினங்களின் பாவனையும் பண்ணைகளில் வளர்க்கப்படும் விலங்குகளின் கழிவுகளூடாக ஆசனிக் முதலிய இரசாயனங்கள் பசளைகளாக இடப்படுகின்ற தன்மைகள் தொடர்பாகவும் கண்டறியப்பட்டு இவை சரியான இயற்கை விவசாயமாகக் கொள்ளப்படமுடியாதவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ள பின்னணியில் உண்மையான மரபணுமாற்றஞ் செய்யப்படாத விதையினங்களையும், பயிரினங்களையும் தூய்மையான இயற்கைப் பசளைகளையும் பயன்படுத்துவதே பொருத்தமான இயற்கை விவசாயம் ஆகும் என வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இதற்கேற்ற விதத்தில் உண்மையான இயற்கை விவசாயத்தை வலியுறுத்துவதாக நூறு கோடி மக்களின் எழுச்சி இடம்பெற்றுள்ளமை கவனத்திற்குரியது.

இலங்கையின் பல்வேறு இடங்களிலும் வாழ்ந்து செயற்பட்டு வரும் பெண்ணிலைவாதச் செயற்பாடாளர்களின் மேற்படி நடவடிக்கைகள் பற்றிய செய்திகளை நாங்கள் அறிய முடிகின்றது. இவற்றுள் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்ட நூறு கோடி மக்களின் எழுச்சி (2021) தொடர்பாக இக்கட்டுரையில் பேசப்படுகின்றது. மட்டக்களப்பில் மூன்றாவதுகண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழுவினரும், சமதை பெண்ணிலைவாத நண்பிகளும், வன்முறையற்ற வாழ்விற்கான காண்பியக் கலைஞர்களும், சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினரும் இச்செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார்கள்.

கடந்த பல மாதங்களாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் ஒரு கொண்டாட்டமாகவே 2021 பெப்ரவரி 14 ஆந் திகதி இந்நிகழ்ச்சி ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டுள்ளது. இச்செயல்வாதத்தில் பங்குபற்றிவரும் மேற்படி நபர்களின் குடும்பங்களில் பெற்றாரும் பிள்ளைகளும் உறவினர்களும் நட்டு வளர்த்த மரபணுமாற்றம் செய்யப்படாத உள்ளூர் விதையினங்களின் விளைச்சல்களை ஒன்றிணைத்து ஓரிடத்தில் மடையாகப் பரப்பி வைத்து இயற்கைக்கு நன்றி கூறி அவற்றைப் பயன்படுத்தி உணவு தயாரித்து உண்டு மகிழ்ந்து இயற்கையினை வாழ்த்தி மகிழும் சடங்காக இந்நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. வீட்டுத்தோட்டச் செயற்பாடுகளின்போது குழுவாகவும், தனியாகவும் உருவாக்கிய விளைச்சல்களைக் காட்சிப்படுத்தியும், ஆற்றுகை செய்தும் இச்சடங்கு நடைபெற்றிருந்தது. கொவிட் நிலைமைகளுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்ட நபர்களின் பங்குபற்றுகையுடனும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும் இச்சடங்கு இடம்பெற்றது.



சடங்குப்பண்பாடு நமது பாரம்பரியத்தில் பின்னிப்பிணைந்த விடயம். உதாரணமாக வருடத்திற்கு ஒருமுறை மாரியம்மனுக்குப் பள்ளயம் கொடுத்தல். இரவில் வயிரவருக்குச் சடங்கு செய்தல் என்பதாக உறவுகள் கூடித் தமது சுயமான விளைச்சல்களைப் பயன்படுத்திச் சடங்கினை நடத்துவதைக் கூறலாம். இவ்வாறு வெவ்வேறு வித்தியாசமான சடங்குகள் நமது பண்பாட்டில் இடம்பெற்று வருகின்றன. இத்தகைய மரபான சடங்குகளுள் பெரும்பாலனவை பண்பாட்டில் ஆதிக்கஞ் செலுத்தும் ஆணாதிக்க, மதம் சார்ந்த, வகுப்புவாதச் செல்வாக்கிற்குட்பட்டவைகளாக இருப்பதையும் காண்கின்றோம். இத்தகைய தன்மைகள் கேள்விக்குரியவையாக மீளுருவாக்கம் செய்யப்பட வேண்டியவையாக இருக்கின்றன. இத்தகைய மீளுருவாக்கத்திற்கான அவசியமும், தேவையும் கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வுச் செயற்பாட்டினூடாக முன்மொழியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதாவது நமது சடங்குகள் சமஸ்கிருத மயமாக்கத்தினின்று விடுவிக்கப்பட்டு இயற்கையுடன் இணைந்த அதன் தன்மையில் மீளுருவாக்கப்படுதல் வேண்டும் என்று இங்கே வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இப்பண்பாட்டுப் பின்புலத்திலேயே 2021 நூறு கோடி மக்களின் எழுச்சியில் மரபணுமாற்றஞ் செய்யப்படாத உள்ளூர் விதையினங்களின் விளைச்சல்களை மடை பரப்பி உணவாக்கி உண்டு கொண்டாடி இயற்கைக்கு வாழ்த்துக் கூறும் சடங்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மடை பரப்புதல், மடை வைத்தல் பழங்குடி மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் சடங்காகும். இந்த வகையில் கடந்த பல மாதங்களாக உள்ளூர் விதையினங்களை மரபணுமாற்றஞ் செய்யப்படாத பயிரினங்களை வளர்த்து அவற்றின் விளைச் சல்களைப் பெற்றவர்கள் அவ்விளைச்சல்களை திருப்பெருந்துறையிலுள்ள இல்லத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

பால்நிலை பாராபட்சங்களின்றி, இன, மத, வகுப்பு, பிரதேச வேறுபாடுகள் கடந்து இயற்கை, மனிதர் எனும் உன்னதமான உணர்வுடன் எல்லோரும் சேர்ந்து விளக்கேற்றிக் கொண்டு

"நாங்கள் வாழ வேண்டும் இந்த பூமியில் - என்றும்
நாங்கள் வாழ வேண்டும் இந்த பூமியில்
இயற்கை தந்த இனிய வாழ்வை
இணைந்து மகிழ்ந்து வாழவேண்டும்"

எனும் பாடலைப்பாடி சடங்கை ஆரம்பித்தார்கள். தொடர்ந்து முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்தில் மடை வைக்கப்பட்டது. மடை பரவப்படும் சமநேரத்தில் கோலம் போடும் வைபவமும் நடைபெற்றது. இயற்கையின் ஒழுங்கினைச் சித்திரிக்கும் வகையிலான கோலம் அங்கு வந்தவர்களின் பங்குபற்றுகையுடன் உருவாக்கப்பட்டது. இவ்வேளையில் இச்செயல்வாதத்தில் பங்குபற்றிய

நண்பர்கள் பலரும் தாம் குழுவாக ஆக்கிய பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார்கள். இப்பாடல்கள் நமது சூழலில் பயிலப்பட்டுவரும் பாரம்பரிய இசை வடிவங்களில் ஆக்கப்பட்டவையாக இருந்தன.

மடை வைத்து கோலம் போட்டதைத் தொடர்ந்து மரபணு மாற்றப்படாத உள்நாட்டு நெல்லரிசியைப் பயன்படுத்திய பொங்கல் பொங்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. மத்தளம், உடுக்கை, பறை இசை முழங்க "எல்லோரும் ஆடியே பாடுவோம் எல்லோரும் பாடிக் கொண்டாடுவோம், வாழ்க்கையை அழகாக மாற்றுவோம்."

என்று தொடங்கும் பிரபல பெண்ணிலைவாதியான கம்லாபாசினுடைய பாடல் பாடப்பட்டு பொங்கல் பானையுள் மரபணுமாற்றப்படாத உள்நாட்டு அரிசியான வட்டப்பொல இடப்பட்டு பொங்கல் பொங்கப்பட்டது. தொடர்ந்து பாடல்கள் பல பாடப்பட்டன. பொங்கல் நிறைவடைந்து அது இயற்கைக்குப் படைக்கப்பட்டதும். இயற்கைக்கு நன்றி கூறும் பின்வரும்

தந்தனத னாதனத னாதனத னானா
தனனாதா னாதந்த னாதந்த னானா(2)

பூமியே இயற்கையே நீ வாழி வாழி
பல்லுயிரும் வாழ உன் வரம் தந்தாய் வாழி

மாரியே நீர் பொழிவாய்
நீ வாழி வாழி
ஊற்றுக்கள் சொரியட்டும்
நீர் வாழி வாழி
காற்றுடன் எரிக்கும் வெயில்
பனிப் பொழிவும் வாழி
பொங்கும் கடல், மலைகளுடன்
பல்மண்ணும் வாழி

தந்தனத னாதனத னாதனத னானா
தனனாதா னாதந்த னாதந்த னானா

மண்ணுக்குள் வாழும் நம்
உயிர்கள் வாழி
காற்றிலும் கலந்துள்ள
சிற்றுயிர்கள் வாழி
ஓடுமுயிர் ஊரும் உயிர்
பறக்கும் உயிர் வாழி
நிற்பதுவும் நடப்பதுவும்
நீந்துவதும் வாழி,
ஆழத்தில் வேரூன்றும்
பெருமரங்காள் வாழி
அடியோடி நிலம்
பரவும் புல்லினங்காள் வாழி

தந்தனத னாதனத னாதனத னானா
தனனாதா னாதந்த னாதந்த னானா

பூமியே இயற்கையே நீ வாழி வாழி
பல்லுயிரும் வாழ உன் வரம் தந்தாய் வாழி
சந்திரரே சூரியரே வாழிய வாழி
அண்ட சராசரங்கள் வாழி நீடூழி!!!

**(ஆக்கம்: கமலா வாசுகி - 29.01.2021)**

வாழிப்பாடல் எல்லோராலும் பாடப்பட்டது. தொடர்ந்து பொங்கல் உண்டவாறு சிறு கலந்துரையாடல். அடுத்து கொண்டு வந்த உள்ளூர் விதைகளிலிருந்து பெற்றுக்கொண்ட விளைச்சல்களைப் பயன்படுத்தி மதிய போசனம் தயாரிப்பதில் அனைவரும் பங்குபற்றினார்கள்.

இவ்வேளையில் மத்தள, பறை இசையுடன் பாடல்கள் பாடப்பட்டன. மதிய உணவின் பின்னர் பங்குபற்றியவர்கள் தமது வீட்டுத் தோட்டங்களில் நடுவதற்காக மரபணு மாற்றப்படாத மரக்கன்றுகளைப் பெற்றுக்கொண்டதுடன் முற்பகல் சடங்கு நிறைவுக்கு வந்தது.

மாலை மூன்று மணியளவில் மீண்டும் சிறுவர்களுடனான சடங்கு ஆரம்பமாயிற்று. இச்செயல்வாதத்தில் ஈடுபடும் நபர்களும் அவர்களுடைய நண்பர்களும் தமது அடுத்த தலைமுறையினருடன் இச்சடங்கில் பங்குபற்றினர். பாடல்கள் இசைக்கப்பட சிறுவர்கள் மங்கல விளக்கேற்றினார்கள் விளக்கேற்றி முடிந்ததும் பாரம்பரியமாக உறி கட்டி விதையினங்களைப் பாதுகாக்கும் வகையில் அங்கு கட்டப்பட்டிருந்த உறிகளில் மரபணுமாற்றஞ் செய்யப்படாத விதையினங்கள் சிறுவர்களால் பாதுகாப்பாகச் சேமிக்கப்படும் நிகழ்ச்சி நடைபெற்றது. அடுத்து மூன்றாவதுகண் குழு நண்பர்களின் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிரான ஆண்களின் குரல்களாக அமைந்த கூத்துப் பாடல்களின் ஆற்றுகை நடைபெற்றது. கூத்தின் ஆற்றுகையினைத் தொடர்ந்து வட்டமாக நின்ற சிறுவர்கள் குளம் கரை விளையாடத் தூண்டப்பட்டார்கள். சிறிது நேரம் குளம் கரை விளையாடியதும் வர்ணந்தீட்டுவதற்கும், கோலம் போடுவதற்கும் சிறுவர்கள் ஆற்றுப்படுத்தப்பட்டார்கள். சிறுவர்களுடன் சேர்ந்து வளர்ந்தவர்களும் வர்ணங்களைத் தீட்டி மகிழ்ந்தார்கள்.

நிறைவில் மீண்டும் எல்லோரும் ஒன்றிணைந்து வாழித்தருவைப் பாடி வீடுகளில் நடுவதற்கான மரக்கன்றுகளையும், குறித்த நூறு கோடி மக்களின் எழுச்சியை நினைவுபடுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள பிரசுரங்களையும் பெற்றுக்கொண்டு மாலை ஐந்து முப்பது மணியளவில் மகிழ்வுடன் தத்தமது இல்லங்களுக்குச் சென்றார்கள்.

இவ்விதமாக ஆக்கபூர்வமான செயற்பாட்டைக் கொண்டாடும் ஒரு சடங்காக மட்டக்களப்பில் நூறு கோடி மக்களின் எழுச்சி(2021) இச்செயல்வாதத்தில் பங்குபற்றி வரும் நண்பர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு நிறைவடைந்திருந்தது.

நமது வரலாற்றில் நமது முன்னோர் தாம் வாழ்ந்த காலத்தின் தேவைகளை முன்னிறுத்தி அவற்றினை பிரயோகத்திற்குக் கொண்டு வருவதற்காக காலத்திற்குக் காலம் புதிய புதிய சடங்குகளையும் விழாக்களையும் கொண்டாட்டங்களையும் கட்டமைத்து முன்னெடுத்து வந்துள்ளார்கள். அந்த வரிசையில் இன்றைய காலத்தின் சவால்களையும் தேவைகளையும் கருத்தில் கொண்டு நூறுகோடி மக்களின் எழுச்சி நிகழ்வில் மரபணு மாற்றப்படாத உள்ளூர் விதையினங்களைப் பயன்படுத்தி நமது பாரம்பரிய உணவுப்பண்பாட்டைப் பாதுகாத்து முன்னெடுத்தலுக்கான சடங்கு முறைமை ஒன்று அதனை முன்னெடுக்கும் நபர்களால் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது எனலாம். இச்செயல்வாதத்தின் தொடர்ச்சியினூடாக இச்சடங்கு மேலும் வலிமையும் அர்த்தமும் அகலிப்பும் பெறுவதாக அமைந்திருக்கும்.

**து.கௌரீஸ்வரன்**
**(OBR -2021)**

# வல்லமையும் விதைகளின் கதைகளும்

எமது பூட்டன் பேத்தி காலங்களில் விவசாயம் மற்றும் தோட்டங்களில் இயற்கைப் பசளைகளை உதாரணமாக ஆட்டு, மாட்டு எருக்கள், குப்பை கழிவுகளை பயன்படுத்தி வந்தோம். காலப்போக்கில் செயற்கை பசளைக்கும், இரசாயன மருந்களுக்கும் அடிமையாகி இயற்கை விவசாயமும் மாற்றமடைந்து அதை உண்டு மனிதரும் பல நோய்களுக்கு உள்வாங்கப்பட்டு வாழ்க்கை காலம் குறையும்வரை சென்றுள்ளது. மூல உணவாகிய நெல்லில் இருந்து சிறு தானியங்கள் மரக்கறி பயிர்கள் வரை எல்லாமே பாரம்பரியத்திலிருந்து விடுபட்டு எல்லாமே கலப்படமாக மாற்றத்திற்கு உள்ளாகிவிட்டது.



அந்தக்காலங்களில் மண்வெட்டியால் நிலத்தைகொத்தி, எருது பூட்டி கலப்பையால் உழுது நிலத்தை பண்படுத்தி, கிணற்றில் பட்டை கட்டி துலா மிதித்து நீர் இறைத்து, பசுமையானதும் மனதுக்கு திருப்தியானதும் மகிழ்வானதுமான தோட்டப்பயிர்ச்செய்கை செய்து வந்தோம். அரிவாளால் நெல்லு வெட்டி எருதால் சூடு வைத்து நெல் எடுத்து, மற்றும் செக்கிழுத்து எண்ணெய் எடுத்து என அந்தக் காலம் என்கின்ற கதைக்குள் அடங்கிவிடுகிறது. இப்போது எல்லாமே நவீனத்துவத்துக்குள் இயந்திரமயமாகிக் கொண்டு வருகிறது. நீர் இறைக்க, உழுவதற்கு, நெல்லு வெட்டுவதற்கு, சூடு அடிப்பதற்கு என சகல விவசாய தோட்டச் செயற்பாடுகள் இயந்திரமயமாகிக் கொண்டு வருகின்றது. இவ் இயந்திரப் பயன்பாட்டின் வெளிப்பாடுகள் நாம் உண்ணும் உணவுகளில் பக்கவிளைவுகளைக் கொண்டுவருவதை உணர்கின்றோம்.

தற்போது மக்கள் துரித உணவுகளுக்கும், இரசாயனச் செயற்கை உணவுகளுக்கும் பழக்கப்பட்டு வருகின்றனர். பாரம்பரிய உணவுகளைத் தேடுவதிலும், உண்பதிலும் ஆர்வம் காட்டுவதில்லை. வடக்கின் கற்பகதரு என அடையாளப்படுத்துகின்ற பனைமரத்தில் இருந்து பெறப்பட்ட உணவுகள், பொருட்கள் தொடக்கம் மூலிகைகள் வரை எமது பயன்படுத்தல்கள் குறைந்து வருவதை கவலையுடனும் ஒருவித மனத்தவிப்புடனும் எதிர்கொள்கின்றோம். ஆனால் எமது நாட்டிலிருந்து வெளிநாடுகளிற்கு சென்றவர்கள் எமது பாரம்பரிய இயற்கைவளம் உள்ள உணவுப்பொருட்களையும் மற்றைய பொருட்களையும் பெற்றுக்கொள்கின்றனர். இதற்காக இங்கிருந்து இத்தகைய பொருட்களை ஏற்றுமதி செய்வதை கண்டுகொள்ளக்கூடியதாக உள்ளது.

எனவே நாம் எல்லோரும் தனிநபர் மாற்றத்திற்கூடாக சமூகத்திலே மாற்றங்களைக் கொண்டுவர பாரம்பரிய விதைகளைத்தேடி வீட்டுத் தோட்டங்கள் உருவாக்கி ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்புகின்ற பொறுப்புடையவர்களாக மாறிவரவேண்டிய தேவை உள்ளது.

இதில் வல்லமை, சமூக மாற்றத்திற்கான போரட்ட இயக்கம் 2003 இலிருந்து பயணித்துக்கொண்டு வருகின்றது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக குரல்கொடுப்பது, சமூக நீதிக்காகப் போராடுவது என்பதை அடிநாதமாகக் கொண்டு தனது பயணங்களை முன்னெடுத்து வருகின்றது. இதில் தனது பயணங்களில் ஒன்றான இயற்கையை சமநிலையில் வைத்திருத்தல் என்பதற்கிணங்க சேதன முறைகளில் வீட்டுத் தோட்டம், நஞ்சற்ற உணவுகளை உட்கொள்ளும் பழக்கங்களை ஊக்குவித்தல், சூழலை ஆரோக்கியமான முறையில் பராமரித்தல் என்கின்ற பயணங்களைப் பயணித்து வருகின்றது. அதனடிப்படையில் 2003லிருந்து 2020 வரையிலான பயணங்களில் சேதனத்தில் வீட்டுத் தோட்டம் என்கின்ற பழக்கங்களை தனது பயணிகளிடத்து முயற்சித்து வருகின்றது.

இச் செயற்பாடுகளின் தொடராக பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கேள்விக்குட்படுத்தும் 16 நாள் செயல்வாதத்தினை (கார்த்திகை 25ந் திகதி தொடக்கம் மார்கழி 10ந்திகதி வரை) முன்னிட்டு வல்லமைப் பயணிகள் கடந்த காலங்களில் முன்னெடுத்த வீட்டுத்தோட்டத்திலிருந்து சேகரித்து வைத்திருந்த விதைகளினை சேகரித்து பகிர்ந்து கொடுத்தல் என்கின்ற செயல்வாதத்திலிருந்து பயணித்தோம். பூமிக்கு வன்முறை செய்யாமல் இயற்கை விவசாயத்தினை முன்னெடுக்க வேண்டும் என்கின்ற நோக்கில் பாரம்பரிய விதைகளைத் தேடிக்கொண்டிருக்கும் அதே வேளை நாம் ஏற்கனவே மூன்று நான்கு வருடமாக சேதனத்தில் பயிரிட்டு பெற்ற விதைகள் மற்றும் விவசாயத் திணைக்களத்தினால் விற்பனை செய்யப்படும் விதைகளை சேகரித்து அவற்றை விதைத்து முளைக்கவைத்து அவற்றை நமது பயணிகளிடையே பகிர்ந்து அந்த மரக்கன்றுகளிலிருந்து வரும் காய்களையும், விதைகளையும் எமக்குள் பகிர்ந்து தொடர்ந்தும் பகிர்ந்து வருவதற்கு முயற்சி செய்து வருகின்றோம். குறிப்பாக எவ்வித இரசாயனம் மற்றும் அசேதன பயன்பாடுகளற்ற பயிரிடுதலையே பின்பற்றுவோம் என்பதை வல்லமைப் பயணிகள் முயற்சித்து வருகின்றனர். இதில் ஏற்கனவே வல்லமைப் பயணிகள் ஒரு சிலரிடம் சேதனத்தில் பயிரிட்டு பெற்ற கத்தரி, வெண்டி, தக்காளி, பூசணி, பாகல், பயற்றை, கீரை, மற்றும் புடோல் போன்ற விதைகளை பெற்றுக் கொண்டோம். இதில் கத்திரி, மிளகாய், தக்காளி விதைகள் சிறிதளவை வல்லமையில் முளையிட்டோம். அதில் எவ்வாறு முளையிடுவது என்பதில் பொலித்தீன், பிளாஸ்றிக் பாவனையைத் தவிர்த்து சிந்தித்த போது சிரட்டை, கடதாசிக் கப் என்பவற்றில் மண்ணை நிரப்பி விதைகளை முளைக்க வைத்தோம். ஏனைய விதைகளை கடதாசிச் சரையிலிட்டு கடதாசியில் சிறிய பெட்டிகளையும் மூடிகளையும் செய்து அச்சரைகளை அதனுள்

வைத்து மகிழ்ந்தோம்.

16 நாள் செயல்வாத இறுதி நாளன்று வல்லமைப்பயணிகள் 25 பேருக்கு இவ்விதைச் சரைகைகளும் முளைக்கவைத்த கன்றுகளும் பகிரப்பட்டது. இதனைத்தொடர்ந்து இப்பயணிகளின் வீடுகளிற்கு தொடர் பணங்களை முன்னெடுத்து எமது பங்களிப்பினையும் வழங்குவதற்கு முயற்சித்து வருகின்றோம்.



எமது பயணங்களில் இத்தகைய பயணங்கள் தொடர்ந்து முன்னெடுத்து வருவதற்கூடாக எமது பிள்ளைகளையும் பெரும் பங்களிப்புச் செய்வதற்கு ஊக்குவித்து வருகின்றோம் அனுபவப் பகிர்வுகளையும், செய்முறை அனுபவங்களையும் பெறுவதற்கூடாக எதிராகாலத்தில் இவர்கள் தமது இளைய பருவத்தில் ஆரோக்கியமான உணவுப் பயிர்ச்செய்கையை முன்னெடுப்பவர்களாக உருவாகியிருப்பர். இதனால் எமது பூமித்தாயையும் பெண்களையும் வன்முறையற்ற உலகிற்கானவர்களாக வாழ்வதை உறுதி செய்வோம்.

**கேமலதா**

**வல்லமைப் பயணி - யாழ்ப்பாணம்**

## என் உடல்

என் உடல் இயற்கையின்
ஓர் பகுதி
இயற்கையின் வல்லமையும்
உதிர்தலும் புதுப்பித்தலும்
சரிதலும் பற்றுதலும் எழுதலும்
காற்றும் அலைகளும்
சுவாலையுமாக
இயற்கையின் வண்ணங்களையும்
காடுகளையும் வாங்கி
ஒவ்வொரு கலங்களும்
ஒத்திசையும் தருணங்கள்..
மனிதர் கற்பித்த காதலும் காமமும்
தாண்டிய பேருவகை - என் உடல்

**கமலா வாசுகி 2022**

## மண்ணும் மனிதனும்

மானிடா!
இயற்கையோடு பின்னிப்பிணைந்து
வாழ்ந்தவர்கள் எமது முன்னோர்
அதனாலேயே அவர்களின்
ஆயுள் ஆரோக்கியமாகவும்
நீண்டும் போனது - ஆனால்
இன்றோ

பூமித்தாயின் மீது இரசாயனங்
களைப் போடுவதேன்? உக்காத
கழிவுகளை கொட்டுவதேன்?
இயற்கையான மண்ணை
காத்திட நாம் மறுப்பதேன்?
மாற்ற முயற்சிப்பதேன்?

நல்ல காற்றை நமக்குத் தரும்
அருமையான மரங்களை
அழிப்பதனால்
நஞ்சையே சுவாசிக்கின்றோம்,
பசுமையையும் இழக்கின்றோம் -
அத்துடன்
மாளிகைகள் போன்ற
வீடுகளையும், உல்லாச
விடுதிகளையும் வானுயர
எழுப்புகின்றோம்- அதில்
சுகபோகங்கள் அனுபவிக்க
மண்ணை கடத்துகின்றோம்
மரத்தை வெட்டுகின்றோம்.

மண்ணில்லாமல் நாம் இல்லை
அதைக் காதலித்து மகிழ
மறுப்பதேன்?
சேதனத்தில் பயிர்ச்செய்கை
செய்திடுவோம் பூமித்தாயை
மகிழ்விப்போம்
நீண்ட ஆயுள் பெற்றிட
பாரம்பரிய விதைகளைச்
சேகரித்துடுவோம் - அதில்
விளைச்சலைப் பெற்று முன்னோர்
போலவே வாழ்வோம்
வாழவைப்போம்.

ஆறறிவு படைத்த மானிடமாம்
நாம் சிந்தனைகளைச்
செயற்படுத்துவோம்
இணைத்திடுவோம் கரங்களை,
பூமித்தாயை மகிழ்வுடன்
கொண்டாடுவோம்

**தனுஜா,**

**வல்லமைப் பயணி**

**திருகோணமலை**

## இயற்கை தந்த வாழ்வு

நாங்கள் வாழ்கின்றோம்
அதனாலே சுவாசிக்கின்றோம்
நாங்கள் சுவாசிக்கின்றோம்
என்பதனாலே வாழ்கின்றோம்
பல கோடி நுண் உயிர்களை
உள்ளெழுத்து வெளிவிட்டு
நாங்கள் வாழ்கின்றோம்
அதனாலே சுவாசிக்கின்றோம்
நாங்கள் சுவாசிக்கின்றோம்
என்பதனாலே வாழ்கின்றோம்

புல் நுனியில் தூங்கும் பனிகள் போல்
பூவின் காம்புகளில் தங்கியிருக்கும்
தேன் துளியாய்
இயற்கையில் உருப்பெற்றோம்

மரங்கள் காடுகள்
ஆறுகள் ஓடைகள்
நதிகள் தோணாக்கள்
எல்லாம் மனிதரை வாழ வைத்தன

தேன் சேகரிக்கும் தேனியைக்
கொல்லாமல் தேனெடுக்கும்
அறிவையும்
பருவ கால மழையையும்
பருவகாலப் பயிரையும்
சிட்டுக் குருவியின் சுதந்திர வாழ்தலும்
எறும்பின் உணவு சேகரிக்கும் திறனும்
இயற்கை அறிவாய் தந்தது

பருவம் தரும் பழங்கள்
பருவம் தரும் கிழங்குகள்
பருவம் தந்த வாழ்வியல்
இயற்கை தந்தது மனிதர்
இணைந்து வாழ

மனிதன் மட்டும் எல்லாம் ஆக
இயற்கை படைத்த
சமநிலை மறந்தோம்
காடழித்தோம் நதி நிரப்பி
கட்டடம் கட்டினோம்
அடிமை மந்திரமும்
உச்சரிக்கத் தொடங்கினோம்

குறுகிய காலம் கொள்ளை இலாபம்
குறுகிய காலம் கொள்ளை இலாபம்

சோற்றில் நஞ்சு காற்றில் நஞ்சு
நீரில் நஞ்சு மண்ணில் நஞ்சு
பசும் பாலில் நஞ்சு பழங்களில் நஞ்சு
குறுகிய காலம் கொள்ளை இலாபம்

இயற்கை தந்த வாழ்வு
இயற்கை தந்த சுதந்திரம்
இயற்கை போதித்த அன்பு
எல்லாம் அழித்து
மனிதன் மட்டும் உலகின் அழிவாய்

நாங்கள் வாழ்கின்றோம் அதனாலே
சுவாசிக்கின்றோம்
நாங்கள் சுவாசிக்கின்றோம்
என்பதனாலே வாழ்கின்றோம்.

**கலாவதி கலைமகள் (OBR -2021)**

## கதை கூறாதே!

ஒவ்வொரு மனிதரின் உடலும்
அவரவரின் சொந்தம் - அதில்
அழகு காண்பதும்
அவரவரின் விருப்பம்
எந்த உடை தனக்குரியது
என்பதும் - அதை
எப்படி அணிய வேண்டும்
என்று நினைப்பதும்
அவரவரின் விருப்பம் - அது
அவரவரின் விருப்பம்
ஆடையை வைத்து அரசியல்
செய்ய வேண்டாமே - பெண்ணின்
ஆடையை வைத்து
அரசியல் செய்ய வேண்டாமே!
ஆடையை வைத்து மதம்
வளர்க்க வேண்டாமே - பெண்ணின்
ஆடையை வைத்து மதம் வளர்க்க
வேண்டாமே!
பார்வையிலும் உள்ளத்திலும்
கோளாறை வைத்துக் கொண்டு
பெண்ணுடலைப் பார்த்துக்
கதை கூறாதே! - பெண்கள்
ஆடை பற்றிக்
கதையளந்து திரியாதே

**து. கௌரீஸ்வரன் (2022)**

## உனக்கேது உரிமை?

மனிதக் கருவைச் சுமந்து - அதை
உயிருள்ள உடலாக
வடிவமைக்கும் - பெண்
அவளுக்குத் தெரியும் - தனது
ஆடைகள் எப்படி
வடிவமைக்கப்படல் வேண்டுமென்று!

மனித குலத்தின்
இருப்பையே - உலகில்
உறுதிப்படுத்தும் அவளுக்குத்
தெரியும் - தன்
உடலை எப்படிப் பேணுவதென்று!

ஆயின்
மனிதருக்கே உருவம்
கொடுப்பவளுக்கு - நீ
ஏன் ஆடை
வடிவமைக்கிறாய்? - இதற்கு
உனக்கேது உரிமை?

ஆணின் விந்தை உயிருள்ள
உடலாக்கும்
வலிமையுள்ள பெண்ணின்
உடல் பற்றியும்
உடல் அழகு பற்றியும்
வகுப்பெடுக்காதே!
உடல் பற்றியும் உடுப்புப் பற்றியும்
முடிவெடுக்கும் தகுதியுள்ள
பெண்களின்
உடல் பற்றியும் உடுப்புப் பற்றியும்
முடிவெடுக்க உனக்கேது உரிமை?

**து. கௌரீஸ்வரன் (2022)**




சின்னதாய் ஒரு வருடல்
தோற்றுப் போன மனம்
வாழ்வு நீண்டதாய்
ஆலையில் குந்தியிருந்து
இளைப்பாறி
அமர்ந்து பறக்கும்
காக்கைகளாய்
நகர்கின்றது.

கடவுளர்களையும் ஆயுதங்களுடன்
படைத்தோம்
கருணையையும் ஆயுதங்களுடன்
செய்தோம்
அன்பினையும் ஆயுதங்களுடன்
போதித்தோம்

ஆயுதமற்ற வன்முறையற்ற
வாழ்வை கனவு காண்பதும்
சாத்தியமற்றதாக்கிய உலகு

என்முன்னே சென்றவள் மீது
வீசப்படும் கற்கள்
அகங்காரி
அடங்காப்பிடாரி
பல ஆடவருடன் திரிபவள்....

எறியுங்கள் கொல்லுங்கள்
சேலை உடுத்து
பரீதா போடு
அங்கங்கள் தெரியுது ஆபாசம்
மூடு, மறை
மூச்சு விடுதலும்
எங்கள் முடிவு
அதிர்கிறது உலகு

உன் ஆடை உரித்து
நிர்வாணமாக்கவும்,
உம்மை வன்முறை
செய்யவும்,
உம் கருவறையை
கட்டுப்படுத்தவும்,
தகர்த்தெறியும் உரிமையும்
எமக்கு உண்டு

நாங்கள் ஆளவும்
வன்முறை செய்யவும்
கெத்தான
மாஸான
பலம் பொருந்தியவர்கள்
அனைத்து அதிகாரமும்
எங்கள் கையில்

என் மகனே
அழகிய உலகில்
நாம் அனைவரும்
வாழப்பிறந்தவர்கள்
சமத்துவமாய்
ஒருவரில் ஒருவர் அன்பு செலுத்தி

இவ்வுலகை அழகாக்கும் வல்லமை
இயற்கை நமக்குத் தந்தது

மகனே
வீதியில் செல்லும்
எந்தப்பெண்ணையும்
வன்முறை செய்யாதே
என் கருவறையில் இருந்த உனக்கு
என் ஆடைக்குள் தூங்கி
என் கதப்பில் உயிர்த்த நீ
எப்படி பெண்ணை வன்முறை
செய்கிறாய்?

நாங்கள் மனிதர்கள்
இவ்வுலகில் அனைவரும்
அன்பாய்
சமத்துவமாய்
வாழப்பிறந்தவர்கள்

**கலாவதி கலைமகள் (OBR 2020)**

# ONE BILLION RISING: AN ARTISTIC UPRISING

**14/02/20022, 2pm, CGEE, UoJ. Report**



Violence against women is considered not only as a national, ethnic, tribal or religious issue but also as a global phenomenon which has to be eliminated and prevented and for the past 18 years, many events have taken place all over the world, raising funds and awareness for local groups and organizations working to end violence against women and girls. One Billion Rising is a global campaign to end violence against women, every year celebrated on 14th Feb.

One Billion Rising 2022 aims to rise to end violence against women and girls and to end the desecration of the earth.


Centre for Gender Equity and Equality, University of Jaffna joined the collective global campaign One Billion Rising this year and it's celebrated as an artistic uprising on 14th Feb.,2022 through poetry reading, storytelling and showcasing posters. CGEE created an impact through its participation in the global movement. The events took place with nearly 15 participants at the CGEE, UoJ on 14th Feb.2022 at 2pm.

The event was commenced with the welcome address by the chairperson of the working committee Mrs. Sivagowri Rajashanthan. The director, CGEE in her address, implied the importance of joining in a global campaign and the need to rise the voice against the exploitation of women and earth.

Then the theme song of One Million Rising which was translated and sung in Tamil was displayed. Dr.(Mrs)S. Yoharatnam read a poetry both in Tamil and English titled 'Stop Violence against Women'.

'Break the Chain', a poetry translated from English was read by Ms. Riophilla Alfred.

Mrs.Aarabee Sivakugan through her short story "நெருப்பு நிமிடங்கள்" and poetry "அவள்களில் நாமும் இருப்போம்" brought out the concept of violence against women in all the forms. A poetry reading by Mrs. Sivagowri Rajashanthan "மௌனத்தை கலைத்திடு சமூகமே" insisted the society to rise to witness and end violence against girls. Mrs.Riophilla Alfred presented a paper on the portrayal of a self-awakening Odyssey of the protagonist in the novel 'One Indian Girl' written by Chetan Bhagat.




The posters designed by the members of CGEE were showcased and at the end of the event the participants shared their collective thoughts in supporting the event. The event came to end with the vote of thanks by the secretary of CGEE, Mrs. Vijitha Pragash.

## நல்ல தோட்டங்கள் செய்வோம்...



(மாரியம்மன் கும்மி மெட்டு)

தந்தனத் தான தன தான
தன தான தந்தனத் தானானா
தந்தனத் தான தன தான
தன தான தந்தனத் தானானா

மனிதர்கள் எல்லோரும்
வாருங்களே - நல்ல
நஞ்சற்ற தோட்டங்கள்
செய்திடுவோம்
அன்னையாம் பூமியை
வன்முறை செய்யாத
விதைகளை நாமும்
விதைத்திடுவோம்.

(தந்தனத் தான தன தான...)

உணவுக்கு ஆதாரமாகிய
மண்ணில் கலப்பற்ற
விதைகளை விதைத்திடுவோம்
நஞ்சிலே விளையாத
பயிர்களை - நாமும்
விளைவித்தே உண்டு
வாழ்ந்திடுவோம்

(தந்தனத் தான தன தான...)

இயற்கை உரங்களைப்
பயன்படுத்தி - எங்கள்
பூமியை நன்றாகச் சுகப்படுத்தி
அன்னையாம் பூமியின்
அரவணைப்பில் - நாங்கள்
நோயற்ற வாழ்க்கையை
வாழ்ந்திடுவோம்

(தந்தனத் தான தன தான...)

பூமிக்கும் உயிர்கட்கும்
வன்முறை செய்யாமல்
மனிதர்கள் எல்லோரும்
ஒன்றுகூடி
நலத்துடன் மகிழ்வான
வாழ்வமைப்போம் - நல்ல
சுகத்துடன் மகிழ்வான
வாழ்வமைப்போம்

**ஜோ. கருணேந்திரா** (OBR -2021)

# நூறு கோடி மக்களின் எழுச்சி – 2022 – மட்டக்களப்பு

இந்த உலகத்தின் அனைத்து அம்சங்களினதும் அழகுமிகுந்த, வித்தியாசங்கள் நிரம்பிய பன்மைத்துவத்தை மறுதலித்து ஒற்றைத் தன்மைக்குக் கொண்டு வரும் எத்தனம் உலகின் மனித குலத்தினுடைய வரலாற்றில் பெண்களிடமிருந்து மனிதக் குழுமங்களின் இயக்கத்தை நிர்ணயிக்கும் அதிகாரத்தை ஆணாதிக்கம் கைப்பற்றிக் கொண்ட காலத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருவதனை நாம் கற்றறிகின்றோம்.



அதிகார வெறி கொண்டு ஆணாதிக்கம் தனது ஆதிபத்தியத்தை பல்பரிமாணங்களில் விரிவாக்கி வலுப்படுத்தி வரும் வரலாற்றின் அடிப்படையாக ஆணாதிக்கத்தின் நலனுக்கான வணிகம் விளங்கி வருகின்றமையினை அறிகின்றோம். ஆதிக்க வேட்கையும், போட்டித்தன்மையும் மிகுந்த இந்த வணிகச் சிந்தனைகளால் பன்மைப் பண்பாடுகளுக்கிடையே முரண்பாடுகளும், குரோதங்களும் ஊக்குவிக்கப்பட்டு அவற்றின் வித்தியாசங்கள் அழித்தொழிக்கப்படுவதும், சமூக நீதியும், சமத்துவமும் மறுதலிக்கப்பட்டு மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வுகள் மென்மேலும் பலமாக்கப்படுவதும், அடிப்படைவாதச் சிந்தனைகள் வேர்கொள்ளச் செய்யப்படுவதும், ஒருவருக்காகப் பலரும், பலருக்காக ஒருவரும் என்கின்ற கூட்டுறவு வாழ்வின் அறம் செயலிழக்கச் செய்யப்பட்டு சுயநலவாதமும், சந்தர்ப்பவாதமும் அதிகரிக்கும் நிலைமையும் மேலோங்கி வருகின்றன. சந்தையையும், விற்பனையையும் பற்றிச் சிந்திப்பதே அபிவிருத்திக்கான வழி என்பது வலியுறுத்தப்படுகின்றது. எல்லாமே விற்பனைக்கான சரக்காகப் பார்க்கப்படும் நிலைமை வலுவாக்கஞ் செய்யப்பட்டு வருகின்றன.

இயற்கையின் படைப்புக்களும், இயற்கை வளங்களும் கட்டுப்பாடற்ற சூறையாடலுக்குரியவையாகவும் ஆகிவருகின்றன. ஆடு நனையுதே என்று முதலை அழுமாப்போல் ஆணாதிக்க வணிகப் பண்பாடு தன்னுடைய ஆதிக்கம் சார்ந்த வணிகத்தை மையப்படுத்தி உலகில் மனித உரிமைகளையும், உள்ளூர் சமூக இனக் குழுமங்களின் விடுதலைகளையும், சமாதானத்தையும், சமூக நீதியையும், இயற்கை வளங்கள் மீதான கரிசனைகள் பற்றியும் தந்திரோபாயமாகவும் சந்தர்ப்பவாதமாகவும் செயற்பட்டு நிலைமைகளைக் கையாண்டு வருவதனைக் காண்கின்றோம்.

உலக வரலாற்றில் ஆணாதிக்க நலன் சார்ந்த வணிகப் பண்பாட்டின் வளர்ச்சிப் போக்கில் கூட்டிக் கழித்துப் பார்த்தால் உலகின் அனைத்து நடவடிக்கைகளாலும் ஆணாதிக்க வணிகத்தின் நுகர்வுப் பண்பாட்டுருவாக்கம் மென்மேலும் வலுவாக்கம் செய்யப்பட்டு வந்துள்ளதை உய்த்துணர முடிகின்றது. இதனை இன்னொரு விதத்தில் சொன்னால் உலகின் நிலைமைகள் நிகழ்வுகள் அனைத்தையும் ஆணாதிக்க வணிகம் தனது நலன்களுக்குரிய வகையில் தகவமைத்து அதனால் தன்னை மென்மேலும் வலுவாக்கி வந்துள்ளது எனலாம்.

இவ்வாறு ஆணாதிக்க வணிகத்தை மையப்படுத்திய நுகர்வுப் பண்பாட்டுருவாக்கத்தினால் இயற்கையுடன் சேர்ந்து அடிநிலையில் பாதிக்கப்படுபவர்களாக பழங்குடி மனிதர்களும், வர்க்க சமுதாயத்தின் பெண்களும் காணப்படுகின்றனர். இத்தகையோர் இயற்கையினையும், மனித சமூகங்களின் பன்மைத்துவத்தையும் பாதுகாப்பதில் தீவிரமான ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள்.



ஏனெனில் இயற்கையின் ஒவ்வொரு அம்சங்களிலும் தம்முன்னோரைக் காணும் பழங்குடியினரும், உயிர்களை உருவாக்கும் உடல், உள வல்லமையினையும், வலுவையும் கொண்ட பெண்களும் அழித்தொழித்து ஆதிக்கம் செய்யும் கருமங்களை விடுத்து ஆக்கபூர்வமான காரியங்களில் ஈடுபடுவதிலும், அது சார்ந்து சிந்திப்பதிலும், புதிய புதிய வழிமுறைகளில் தடைகளை அகற்றி முன்னேறுவதிலும் தமது வாழ்நாட்களைப் பயன்படுத்தி வருகின்றார்கள். இதன் காரணமாக உலக அளவில் பெண்ணிலைவாதச் சிந்தனைகள் புதிய புதிய பரிமாணங்களுடனும், புதிய புதிய பரிணாமங்களுடனும் முன்னகர்ந்து வருவதனைக் காணுகின்றோம்.

ஆணாதிக்க வணிகப் பண்பாடு கட்டமைத்துள்ள சனநாயகம், அரசியல் அதிகாரம், நாடுகள், தேசங்கள் என்ற ஆதிக்க வணிகத்துக்கான அரசியல் கட்டமைப்புக்களைக் கடந்து மனிதர், மனிதத்துவம், உலகளாவிய சகோதரத்துவம், இயற்கையும் மனிதரும், இயற்கையும் அது தரும் வாழ்வாதாரங்களும் என்ற கருத்துக்களை முன்னிறுத்தி பெண்ணிலைவாதச் சிந்தனைகள் இவ்வுலகில் இயற்கையினதும் மனிதர்களினதும் மேம்பாடு குறித்து புதிய சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் முன்மொழிந்து வருகின்றன.

குறிப்பாக ஆக்கபூர்வமான வாழ்தலுக்கான செயற்பாடுகளை தனியாளிலிருந்து ஆரம்பித்து குடும்ப அலகில் வலுப்படுத்தி அவற்றைச் சமூக நிலைக்குப் பரவலாக்கி கணிசமான மாற்றங்களுக்கு இட்டுச் செல்லுதல் என்பது பெண்ணிலைவாதச் சிந்தனைகள் வலியுறுத்தும் வாழ்வியலாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே உலகம் எங்கிலும் சிறு சிறு குழுக்களாக பெண்ணிலைவாதச் செயற்பாட்டாளர்கள் அர்த்தபூர்வமான வாழ்தலூடாக பெண்ணிலைவாதச் சிந்தனைகளை வலுப்படுத்தி வருகின்றார்கள். இவ்வாறு உலகந்தழுவி செயற்படும் பெண்ணிலைவாதச் செயற்பாட்டாளர்களிடையே உலகளாவிய சகோதரித்துவம் வலுவாகவும் வளமாகவும் இயக்கம்பெற்று வருவதனைக் காண்கின்றோம்.

பெண்களையும், ஆண்களையும், சிறுவர்களையும் மையப்படுத்தி சமத்துவமான வேலைப் பகிர்வுகளுடன் இயற்கையினை நேசித்து வாழும் வாழ்வியலைக் குடும்ப அலகில் பிரயோகத்திற்குக் கொண்டு வருதல் இதன் அடிப்படை நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்தகைய வாழ்தல் வன்முறைகள் அற்ற சமத்துவ வாழ்க்கை முறைமைக்கான பயில்வாகக் கடைப்பிடிக்கப் படுகின்றது. இந்தக் கருத்திலும் வாழ்விலும் உடன்படும் நண்பர்கள் ஒன்றிணைந்து ஒரு சமூகமாக இயங்குவதனூடாக இதனை முன்னெடுத்து வருகின்றமையினை உலகந்தழுவி கண்டு கொள்ள முடிகின்றது.

இந்நண்பர்கள் இதற்காக மரபணுமாற்றம் செய்யப்படாத நமது சூழலுக்கேயுரிய உள்ளூர்ப் பயிரினங்கள், செடிகள், கொடிகள், மரங்கள்



முதலியவற்றைத் தேடியெடுத்து வீட்டுத் தோட்டம் செய்தல், உள்ளூர் உணவு முறைமைகளை மீளுருவாக்கம் செய்தல், உள்ளூர் கலைத் தொழில் முனைவுகளை வலுப்படுத்துதல், அத்தகைய தொழில் முயற்சிகளுக்கான வாய்ப்புக்களை அதிகரித்துக் கொடுத்தல், ஆக்கபூர்வமான உள்ளூர் சிறுவர் விளையாட்டுக்களை சிறுவர்களுடன் விளையாடுதல், பாடுதல், ஆடுதல், கவிதை எழுதுதல், ஆக்க இலக்கியம் செய்தல், ஆற்றுகைகளை நிகழ்த்துதல், காண்பியக் கலைகளை உருவாக்குதல், உள்ளூர் வாத்தியங்களை இசைத்தல் அவற்றைப் பயிலுதல், உள்ளூர் ஆற்றுகைக் கலைகளைப் பயிலுதல், மீளுருவாக்குதல், ஆற்றுகை செய்தல் எனக் கலையாக்கங்களுடன் தொடர்புடையதாகத் தமது வாழ்வியலை வடிவமைத்து வாழ்ந்து வருவதனைக் காண்கிறோம்.

இத்தகைய கருத்தியல் தெளிவுடன் உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 14 ஆந் திகதி நூறு கோடி மக்களின் எழுச்சி எனும் நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொனிப்பொருளை மையப்படுத்தி இந்த வாழ்க்கை முறை பிரயோகத்திற்குக் கொண்டு வரப்படுகின்றது. இந்த வருடம் பெண்களின் உடலைக் கொண்டாடுவோம் எனும் தொனிப்பொருளில் இத்தினம் திட்டமிடப்பட்டு அதற்கான உரையாடல்கள், கலையாக்கச் செயற்பாடுகள், பிரச்சார நடவடிக்கைகள் முதலியன மேற்கொள்ளப்பட்டன. இச்செயல்வாதத்தில் குறித்த தினத்தை நோக்கிய ஒத்தக் கருத்துடைய மனிதர்களின் கூட்டிணைவும் அதற்காகத் தனித்தும் சேர்ந்தும் செயற்படுதலும் மிகவும் அடிப்படையாக முக்கியத்துவம் பெறுகின்றன. அதாவது குறித்த கருத்தியலைத் தெளிவாக விளங்கிக் கொள்ளுதல், அதுபற்றி உரையாடுதல், அதற்காக ஆக்கபூர்வமான காரியங்களில் ஈடுபடுதல், அதுசார்ந்து சிந்தித்தல் புத்தாக்கங்களைப் படைத்தல் என்று மாற்றத்திற்கான வாழ்வியலைப் பிரயோகத்திற்குக் கொண்டு வருதல் என்பதே இதன் பெறுபேறாகக் கருதப்படுகின்றது. இவை சிறிய சிறிய அளவில் முன்னெடுக்கப்பட்டாலும் அவற்றின் நிலைபேறு என்பது மிகவும் உறுதியானதாக அமைந்திருக்கும் என்பது எதார்த்த அனுபவமாக இருக்கின்றது.

இந்த வகையில் இலங்கையின் கிழக்கிலே மட்டக்களப்பில் மூன்றாவதுகண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழுவினர், சமதை பெண்ணிலைவாத நண்பிகள், வன்முறையற்ற வாழ்விற்கான காண்பியக் கலைஞர்கள் ஒன்றிணைந்து நூறு கோடி மக்களின் எழுச்சி நிகழ்ச்சியை முன்னெடுத்து வருகின்றார்கள்.

பெண்களின் உடல் பெண்களுக்கே சொந்தமானது அதை யாரும் உரிமை கொண்டாட முடியாது, பெண்களின் உடல் சார்ந்து பெண்களே முடிவெடுக்கும் வல்லமையுள்ள சமூகங்களை உருவாக்குதல் வேண்டும், மனித உடலின் அழகு அதன் பன்மைத்துவமாகும் எனும் விடயங்களை முதன்மைப்படுத்தி இந்த வருடத்திற்கான நூறு கோடி மக்களின் எழுச்சி திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டது.

இந்த வருடம் (2022) மட்டக்களப்பு நாவற்குடாவில் உள்ள ஜீவஒளி விளையாட்டு மைதானத்தில் இந்தச் செயற்பாடுகளின் கொண்டாட்டம் கடந்த 14.02.2022 ஆந் திகதி காலை தொடக்கம் மாலை வரை நடைபெற்றிருந்தது. இந்த நிகழ்ச்சிக்கான ஒத்துழைப்பினை ஜீவஒளி விளையாட்டுக் கழக அங்கத்தவர்களும், குறித்த ஊரின் பொது மக்களும் வழங்கியிருந்தார்கள்.



மைதானத்தின் நிழல்தரும் இடங்களில் காண்பியக் கலையாக்கங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. வன்முறைக்கு எதிரான ஓவியர்கள் குழுவினைச் சேர்ந்த சு.நிர்மலவாசன், ம.ஜதீஸ்குமார், மதிஸ்குமார், வினோஜா ஆகியோருடைய படைப்புக்கள் இதில் இடம்பெற்றிருந்தன. நிர்மலவாசனின் படைப்பாக்கமானது பெண்கள் ஓய்வு



எடுப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் ஓய்வு எடுப்பதற்கு உகந்ததான மரநிழல் ஒன்றில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இந்த இடத்தில் பல பெண்கள் வந்து அமர்ந்து நீண்ட நேரம் தத்தமது வாழ்வியல் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதையும் அவதானிக்க முடிந்தது.

முற்பகல் வேளையில் சமதை பெண்ணிலைவாத நண்பிகளின் நீதிக்கான பறையிசையுடன் பங்குபற்றுனர்கள் அழைத்து வரப்பட்டு பெண்ணிலைவாதச் செயற்பாட்டாளரும் நூறு கோடி மக்களின் எழுச்சி நிகழ்ச்சியை முன்னெடுத்த முன்னோடிகளில் ஒருவருமான அமரர் கம்லாபாஸின் அவர்களின் ஒளிப்படத்திற்கு முன்னால் தீபமேற்றி அவரால் ஆக்கப்பட்ட பாடலைப் பாடுதலுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. இதையடுத்து அங்கு வந்த பொது மக்கள் காண்பியக் கலையாக்கங்களைப் பார்வையிட்டதுடன் ஓய்வாக இருந்து உரையாடல்களிலும் ஈடுபட்டனர். இதேநேரம் குறித்த நிகழ்ச்சியில் பங்கெடுக்க வந்த சிறுவர்களுடன் காண்பியக் கலைஞரான வினோஜா அவர்கள் மேற்கொண்ட ஓவியக் களப்பயிற்சி மைதானத்தின் பார்வையாளர் அரங்கிலே நடைபெற்றிருந்தது. சிறுவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் சித்திரங்களை வரைவதில் பங்குபற்றினர். இதன் பின்னர் குறித்த சிறுவர்களுடன் உள்ளூர் நடனங்களின் ஆட்டக்கோலங்களைப் பயிற்றுவிக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இதிலும் சிறுவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபட்டிருந்தனர்.

பிற்பகல் வேளையில் நீதிக்கான பறையிசை, நாவற்குடா கிழக்கு சிறுவர் குழுவினருடைய பாடலளிக்கை, வி.இ.ஞானபாரதியின் தனியாள் ஆற்றுகை, மூன்றாவதுகண் நண்பர்கள் குழுவினரின் பாடலளிக்கை, மீளுருவாக்கஞ் செய்யப்பட்ட பெண் பாத்திரங்களின் கூத்து அளிக்கை, ஆதித்தாயின் நடனம் என்பன ஆற்றுகை செய்யப்பட்டு பங்குபற்றிய இளைஞர்கள், பெண்கள், சிறுவர்களுடனான கலந்துரையாடலுடன் இந்நிகழ்ச்சி நிறைவடைந்திருந்தது.

**து. கௌரீஸ்வரன்**
**OBR - 2022**

# கருப்பீ

“வெள்ளை நிறத்தொரு பூனை
எங்கள் வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றது பூனை
அவை பேருக்கொரு நிறம் ஆகும்
சாம்பல் நிறத்தொரு குட்டி
கரும் சாந்தின் நிறமொரு குட்டி
பாம்பின் நிறமொரு குட்டி
வெள்ளைப் பாலின் நிறமொரு குட்டி
எந்த நிறமிருந்தாலும் அவை
யாவும் ஓரே தரம் அன்றோ
இந்த நிறம் சிறிதென்றும்
இஃது ஏற்றம்
என்றும் சொல்லலாமோ.”

வெள்ளை நிறத்தொரு பூனை…
எங்கள் வீட்டில் வளருது கண்டீர்…

**எ**ன்ற பாடலை முணுமுணுத்தபடி அடுப்படியில் வழக்கம்போல வேலைகளை பார்த்துக் கொண்டிருந்தாள் ராசாத்தி. ராசாத்தி என்ற பெயர்தான் தன்னுடைய பெயர் என்பது மறந்து போகும் அளவிற்கு “கருப்பீ” என்ற பட்டப்பெயர் அவளின் உத்தியோகபூர்வ பெயராக உருவாக்கிவிடப்பட்டிருந்தது. சின்ன வயதில் அவள் மாமன் தோளுக்கு மேல் தூக்கி வைத்து கொஞ்சும் போதெல்லாம் ராசாத்தி என்று சொல்லி அழைத்ததை விட கருப்பீ என்று சொல்லி அழைத்ததுதான் அதிகம். தன்னை அன்பில் மாமன் கொஞ்சுவதாக உறவினர் சொல்லுவதை கேட்டு அவளும் தன்னை யார் கருப்பீ என்று அழைத்தாலும் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்துக் கொள்வாள். கருப்பீ அன்பின் அடைமொழியாய் மாறிப் போயிருந்த அந்த காலத்தில் தான் எதிர்பாராத அந்த சம்பவம் நடந்தாயிற்று.

வழமைபோல எந்தவித எதிர்ப்புமின்றி பள்ளிக்கு சென்று வருவதில் விருப்புடைய அவள் அன்று பள்ளிக்கு செல்ல சினுங்கி கொண்டிருந்தாள். அம்மா அதட்டியும் அப்பா என்னவென்று கேட்டும் பதில் பேசாத அவள் ”பள்ளிக்கு மட்டும் போக மாட்டேன்” என்பதில் உறுதியாய் இருந்தாள். விருப்பத்தோடு பள்ளிக்குச் சென்றுவரும் இவளுக்கு என்னதான் ஆயிற்று. தாயும் தந்தையும் ஒன்றும் புரியாதவர்களாய் நின்றுகொண்டிருந்தார்கள். ஒன்றுமே பேசாமல் கண்ணாடியை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள் ராசாத்தி. சற்று நெருங்கிச் சென்று முகத்தை இரண்டு பக்கமும் மாறி மாறி திருப்பி பிடித்து பார்த்துவிட்டு சோர்ந்து போனாள்.

ஒன்றுமே பேசாமல் இத்தனையும் கவனித்துக் கொண்டிருந்த தாய், ராசாத்தி என்று அழைக்க எண்ணியவள் கருப்பீ என்று அழைக்கலானாள். வழமை போல சிரித்துக்கொண்டு என்னம்மா… என்று கேட்டு கொண்டே ஓடி வரும் குழந்தையாய் அவள் இருக்கவே இல்லை. விருட்டென்று எழுந்தவள் கருப்…பீ என்று தன்னையே தான் சபித்துக் கொண்டவளாய் என்னம்மா என்று பெரிய மனுஷி போல் கேட்ட இடத்திலேயே நின்று கொண்டிருந்தாள். அவளின் முகத்தில் கோபமும் வெறுப்பும் ஒன்றென பூத்து மறைந்தது.

மீண்டும் கருப்பீ என்றழைக்க நினைத்த தாயின் உள்ளத்தை உணர்ந்தவள் போல் ஓடிச்சென்று கதிரையில் அமர்ந்திருந்த தாயின் வாயை பொத்தி பிடித்துக்கொண்டாள். மீண்டும் என்னம்மா.. என்றவள் முகத்தில் கோபம் மட்டுமே இப்போது பூத்துக் கிடந்தது.




வழமைக்கு மாறாக பள்ளிக்குச் செல்ல அடம்பிடித்த பிள்ளையின் மனதில் இருந்ததை ஊகித்து அறிந்து கொண்டவள் போல தாய் தன் வாயைப் பொத்தியிருந்த ராசாத்தியின் கையை ஒருதரம் கொஞ்சி எடுத்துவிட்டு, அள்ளி அணைத்து தன் மடியோடு இருத்தி வைத்து கதைக்கத் தொடங்கினாள். தலையை வருடிக் கொடுத்த வாறே ”இப்போ நான் உனக்கு ஒரு பாட்டு சொல்லி தரவா…. நான் பாட நீயும் என்னோட சேர்ந்து பாடு என்ன… ம்… என்ன…” என்ற தாயின் ஒரு கேள்விக்கும் பதில் சொல்லாமல் இருந்தாள் ராசாத்தி.

”வெள்ளை நிறத்தொரு பூனை எங்கள் வீட்டில் வளருது கண்டீர்..” என்று தாய் பாட ஆரம்பித்த மாத்திரத்திலே விருட்டென்று மடியிலிருந்து இறங்கியவள் ”ஐயோ அம்மா இங்கேயும் வெள்ளை தானா என்றவளின் கண்கள் கோபத்தில் சிவந்து போயின. இவளுக்கு ஏன் இத்தனை வெறுப்பு என்று கேட்க நினைத்தவள் ஒன்றும் கேட்காமலே ராசாத்தி முழுமையாய் பாட்டை கேளம்மா என்றாள்.

ஒன்றுமே தேவையில்லை அம்மா, அந்த வெள்ளையில் அத்துணை என்ன பிடிப்பு உங்களுக்கு. இத்தனை நாளும் கருப்பீ என்று அழைத்தால் நான் சந்தோஷப்பட்டதுதான் அதிகம். ஆனால் வெள்ளை…, கருப்பு… இரண்டும் எதிரெதிர். இங்கு வெள்ளை விரும்பப்படும் அளவிற்கு கருப்பை யாரும் விரும்புவதில்லை. கருப்பீ அன்பில் கொஞ்சுவது இல்லை. என் உடலை என் நிறத்தை நானே வெறுக்கச் செய்வது” என்று சொல்லி முடிக்கும் முன்னமே ஓங்காரித்து அழத் தொடங்கினாள் ராசாத்தி.

இவள் எப்போது இவ்வளவு பெரியவளானாள். வெள்ளை… கருப்பு… எதிரெதிர். எங்கிருந்து இதையெல்லாம் கற்றுக்கொண்டாள்? கருப்பீ இந்த பெயர்… இதே பெயர… இவளுக்கு இவ்வளவு காயங்களை எப்போது ஏற்படுத்தியது என தனக்குள்ளே ஒன்றன்பின் ஒன்றாய் கேள்விகளை தொடுத்துக் கொண்டே ராசாத்தியை சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள் தாய்.

தாயின் மடியில் சுருண்டு படுத்துக்கொண்டவள் விம்மியபடியே கதைக்கத் தொடங்கினாள். “ஏனம்மா கருப்பும் கலர் தானே. வெள்ளை பிள்ளைகள் என்டால் டான்சில் முன்னுக்கு. கருப்பு என்பதாலேயே நான் டான்ஸ்ல பின்னுக்கு. எல்லாரையும் போல நானும் நல்லாத்தான் ஆடினேன் ஆனால் கருப்பு என்பதாலேயே பின்னால விட்டுட்டாங்க. கருப்பீ எண்டு கூடபடிக்கிற பிள்ளைகள் கிண்டல் செய்யிறாங்க. நான் பள்ளிக்கு போக வே மாட்டேன். எந்த நிறமிருந்தாலும் அவை யாவும் ஓரே தரம் அன்றோ என பாடம் சொல்லித்தார பள்ளியே நிறத்தால பாகுபாட்ட காட்டுறாங்க… சொல்லியும் கொடுக்கிறாங்க… என்று மீண்டும் ஓங்காரித்து அழத் தொடங்கினாள்.

இந்தப் பிஞ்சு மனதில் ஏற்பட்ட காயத்தை தன்னால் ஒரு போதும் ஆற்றவே முடியாதோ என தாயும் அவளின் தலையை வருடி கொடுத்த வாறே யோசனையில் ஆழ்ந்திருந்தாள். ராசாத்தி மேலும் பேச ஆரம்பித்தாள். அம்மா என் கலருக்கு என்ன பிரச்சனை.. கருப்பு எண்டா வடிவில்லையா அம்மா… மாமா என்னை கருப்பீ என்று கொஞ்சும் போதெல்லாம் சந்தோஷப்பட்டிருக்கன். சீ… கருப்பு வடிவேயில்லை என்பது மட்டும் என் மண்டைக்கு உரைக்கவே இல்லையே அம்மா…

யாரடி அப்படி உனக்கு சொல்லியது

என் ராசாத்தி என்று சொல்லுவது போல் குழந்தையை அள்ளி எடுத்து நெஞ்சோடு அணைத்துகொண்டாள் தாய். இதுவரைகாலமும் வெள்ளையை போல் கருப்பும் கலர் தான் என்று எண்ணி சந்தோஷமாகத் திரிந்துக் கொண்டிருந்தவள் இன்று தன்னை த்தானே வெறுத்துக் கொள்ளுமளவிற்கு கருப்பீ என்ற பெயர், அன்பின் அடைமொழி, முழு வன்மத்தின் தொனியாய் அவள் மனதில் ஓங்கி அடிக்கப்பட்டு இருப்பதை உணர்ந்து கொண்டாள் தாய்.


அம்மா இப்போதுதான் ஒன்று புரிகிறது வெள்ளையா இருக்கிற பிள்ளைகளை வெள்ளை என்று சொல்லுவதும் இல்லை. செவப்பீ என்று கொஞ்சுவதும் இல்லை. "அழகி..." என்றுதானே கொஞ்சுகிறார்கள். கருப்புப் பிள்ளை என்றால் மட்டும் கருப்பீ என்கிறார்கள். கலரிலும் அதுவும் கருப்பு வெள்ளையில் இத்தனை போர் ஏன் அம்மா...? ஏன்?. ராசாத்தியின் இத்தனை கேள்விகளுக்கும் பதில் சொல்ல ஒன்றுமே இல்லாதவள் போல் நிலை குலைந்து போனாள் தாய்.

அம்மா... அம்மா... என்ன என்று கேட்பது போல் கண்களை விழித்தாள் தாய். ராசாத்தி பேசத்தொடங்கினாள். "நீ ஒன்றும் கவலைப்படாதே அம்மா! யார் என்ன சொன்னாலும் என் நிறம் கருப்புதான். கருப்பு அழகு என்பதில் நான் எப்போதும் உறுதியாக இருக்கிறேன். அம்மா! என் உடல் என் நிறம் நீ எனக்கு தந்தது அதை ஒருபோதும் வெறுக்கவே மாட்டேன் அம்மா . நான் நானாக இருப்பதையே விரும்புகிறேன் அதானே சரியம்மா... சொல்லேன் அம்மா... ஒன்றுமே பேச முடியாதவளாய், இத்தனை சிறு வயதில் எத்தனை தெளிவு, எவ்வளவு திடம் ஒரு கணம் பூரித்துப்போன தாய், என் செல்லம் அடி நீ என இறுக்கி அணைத்து கொஞ்சலானாள்.

அம்மா... என்று கூவியபடியே சட்டையை பிடித்துக் கொண்டு, ஸ்கூல் வேன் வந்திட்டு அம்மா... சீக்கிரம் வாம்மா... என்று ராசாத்தியின் சட்டையை பிடித்து இழுத்தே வெளி வாசலுக்கு அழைத்து வந்து, முதல் நாளிலே எவ்வித பயமும் இல்லாதவளாய் கையசைத்து விடை பெற்றுக் கொண்டாள் கடைக்குட்டி கீதா. நினைவு திரும்பப் பெற்றவள் போல ராசாத்தி, உதட்டோரமாய் புன்னகையை படரவிட்டவளாய்இ தன்னையும் தன் மனத்திடத்தையும் கீதாவில் கண்டுணர்ந்து பதிலுக்கு கையசைத்து விடை பெற்றுக்கொண்டாள். வானொலி " கேளடா மானிடவா எம்மில் கீழோர் மேலோர் இல்லை..." என பாடி ஒலித்து ஓய்ந்தது.

**இரா. சுலக்ஷனா**

## நூறு கோடி மக்களின் எழுச்சி 2022 ஐ முன்னிட்டு கிழக்குப் பல்கலைக்கழக கலைகலாசார பீட மாணவர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் நிழல்கள்.


STUDENT UNION
Faculty of Arts & Culture
Eastern University, Sri Lanka
E-Mail : facstudentunion@gmail.com

Date10/02/2022

President
Mr.N.Jeyaraja
(T.P-0772895892)

Vice President
Mr.N.Tharshan
(T.P 0769872386)

Secretary
Mr.G.Mathushanth
(T.P-0754141021)

Junior Treasurer
Mr.S.Sutharshan
(T.P.0777987404)

Editor
Miss.V.Nirojini
(T.P.0758489603)

Committee Members
Miss.L.Yashani
Mr.S.Sanseepan
Mr.M.I.M.Furkan
Mr.K.Sathurshan
Mr.A.G.M.Sairoos
Mr.J.Tharshikaran
Mr.A.M.Askan
Mr.T.Pratheepan

[illegible]

Mr.G.Mathushanth
Secretary
Student's union
Faculty of Arts & Culture
Eastern University,Sri Lanka

President
Student's union
Faculty of Arts & Culture
Eastern University, Sri Lanka

Student Union, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka












# 2022 OBR ஐ முன்னிட்டு நாவற்குடா கிராமத்துப் பிள்ளைகளால் வரையப்பட்ட சித்திரங்கள்



















14 பெப்ரவரி 2022 இல் OBR நிகழ்ச்சியில் சிறுவர்களால் பாடல்கள் இசைக்கப்பட்ட போது







